Registered as a NewsPape

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 26 வெள்ளிக்கிழமை (12-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்; 301

## வெறிச்சோடிக் கிடக்கிறது வவுனியா நகரப்பகுதி

வவுனியா, நவ. 12

வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் இருந்து மக்கள் நேற்று முழுமையாக இடம்பெயர்ந்ததால் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

நேற்று முன்தினம் முதல் இடம்பெயரத் தொடங்கிய மக்கள் நேற்றுக் காலையுடன் முழுமையாக இடம்பெயர்ந்து விட்டனர்.

நகரப் பகுதியில் வாழ்ந்த சுமார் 30 ஆயிரம் பேரில் 10 ஆயிரம் பேர் வெளியிடங்களுக்கும் — எஞ்சியோர் மாவட்டத்துக்குள்ளும் இடம்பெயர்ந்துள்ளனர்.

பொதுமக்கள் பெறுமதியான உடைமைகளை எல்லாம் வீட்டில் விட்டுவிட்டு சிறிய பைகளுடன், அத்தியாவசியப் பொருள்களுடன் இடம்பெயர்ந்து ஆசிக்குளம், ராஜேந்திரக்குளம் ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அங்குள்ள ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளிலும் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும் அவர்கள் தங்கி உள்ளனர்.

நகரில் உள்ள கடைகள் யாவும் பூட்டப்பட்டுக் கிடந்தன. வங்கிகள், அரச அலுவலகங்கள் எதுவும் இயங்கவில்லை.

ஆஸ்பத்திரி மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரச அதிபரும் அதிகாரிகளும் செட்டிகுளத்தில்

வவுனியா, நவ. 12

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் உயர் அதிகாரிகள் செட்டிகுளம் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

செட்டிகுளம் பிரதேச செயலர் அலுவலகத்தில் தங்கி அவசரப் பணிகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

அரச அதிபருடன் ஏனைய அதிகாரிகளும் அங்கு தங்கி வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வங்கிகளின் அதிகாரிகளும், ஊழியர்களும் அநுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தமது வங்கிகளின் கிளைகளுக்குச் சென்றுள்ளனர்.

[12 ஆம் பக்கம் பார்க்க]

# முன்னரங்கு நிலைகள் மீது புலிகள் ஆட்லறித்தாக்குதல்!

## முறியடித்துவிட்டதாக படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 12

**வன்னியில் ஓமந்தைக்கு வடமேற்குப் பகுதியிலும் பள்ளமடுவுக்கு தெற்குப் பகுதியிலும் மருதமடுப் பகுதியிலும் அமைந்துள்ள படையினரின் முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை நடத்துகின்றனர்.**

பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் மேற்கண்டவாறு நேற்று மாலை தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஓமந்தைக்கு வடமேற்கேயுள்ள பகுதியிலும் பள்ளமடுவுக்குத் தென்பகுதியிலும் மருதமடுப் பகுதியிலும் அமைந்துள்ள முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் பீரங்கித் தாக்குதல்களையும், மோட்டார் தாக்குதலையும் நடத்தி அந்தத் தாக்குதல்

(11 ஆம்பக்கம் பார்க்க)

## புலிகளின் அறிவிப்பை அடுத்தே மக்கள் இடம்பெயர்ந்தனர்

கொழும்பு, நவ. 12

விடுதலைப்புலிகள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் விடுத்த அறிவிப்பை அடுத்தே வவுனியாவில் பொதுமக்கள் இடம் பெயர்ந்தனர். சிறு எண்ணிக்கையினரே இடம் பெயர்ந்தனர். எஞ்சிய பெரும்பான்மையானவர்கள் தமது இருப்பிடங்களில் தொடர்ந்தும் வாழ்கிறார்கள்"

பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத்தலைமையகம் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவில் இணைவு

கொழும்பு, நவ. 12

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க நேற்று ஐ. தே. கவில் இணைந்து கொண்டார்.

சிறிமானி அத்துலத் முதலி தலைமையில் இயங்கும் அந்த முன்னணியில் அங்கம் வகித்த அவர் அதில் இருந்து விலகி ஐ. தே. கவில் இணைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய சமயம் அவர் ஐ. தே. க. எம். பிக்கள் வரிசையில் அமர்ந்து இருந்தார்.

அடுத்த தேர்தலில் அவர் ஐ. தே. க. சார்பில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப் படுகின்றது. (இ-3)

## ரீ. வி. படப்பிடிப்பாளர்கள் தடுத்து வைத்து விடுவிப்பு

கொழும்பு, நவ. 12

வவுனியாவில் இருந்து ரயில் மூலம் கொழும்பு வந்து சேர்ந்த பொதுமக்களை படம் எடுத்த ரி. என். எல். தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களைப் பொலீஸார் தடுத்து வைத்துப் பின்னர் விடுவித்தனர்.

கோட்டை ரயில் நிலையத்தில் வந்திறங்கிய பொதுமக்களை அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருந்தனர் என்றும் —

சோதனை நடவடிக்கைகளை படம் எடுக்கவேண்டாம் எனப் பொலீஸார் அவர்களைக் கேட்டனர் என்றும்—

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிமேயர் ரவிராஜ் தலைமையில் நேற்று கொழும்பில் உண்ணாவிரதம்

### அமைச்சரை இன்று சந்தித்துப் பேசுவர்

கொழும்பு, நவ. 12

யாழ். மாநகரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கக் கோரி யாழ். மாநகரசபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் நால்வர் கொழும்பு யூனியன் பிளேஸில் உள்ள மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகம் முன்பாக நேற்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

மாநகரசபைப் பிரதிமேயர் ந. ரவிராஜ் தலைமையில் உறுப்பினர்களான ச. அரவிந்தன், த. முகுந்தன், எஸ். எஸ். கணேந்திரன் ஆகியோர் நேற்றுக் காலை 7 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதம் இடம்பெற்ற இடத்துக்கு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கி. துரைராசசிங்கம், பொ. செல்வராசா ஆகியோர் உண்ணாவிரதிகளுடன் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் அவர்கள் கூட்டணியின் ஏனைய எம்பிக்களான ஆர். சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் சகிதம் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானாவுடன் கலந்துரையாடினர்.

யாழ். மாநகரசபை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரை மாநகர சபை உறுப்பினர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் கடிதத்துக்கு சந்திரிகா நேற்றுப் பதில்

கொழும்பு, நவ. 12

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றுக் கடிதம்ஒன்றை அனுப்பியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயமாக பகிரங்க விவாதம் நடத்தவருமாறு கோரி ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதத்துக்குப் பதில் அளித்தே ஜனாதிபதி நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு காணும் வழிமுறை, யுத்

[11 ஆம் பக்கம் பார்க்க]

## சீனி, மண்எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் போதிய அளவு கையிருப்பில்

யாழ்ப்பாணம், நவ. 12

குடாநாட்டில் சீனி, மண்எண்ணெய்போன்ற அத்தியாவசியப் பொருள்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தச் சிலர் முயல்வதாகத் தகவல் கிடைத்தது என்றும் --

ஜனவரி மாதம் வரையான காலப்பகுதிக்கு தேவையான அளவு பொருள்கள் உள்ளன என்றும்—அவர் மேலும் தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## போட்டிப் பரீட்சை இன்றி வட.- கிழக்கில் ஆசிரிய நியமனம்

கொழும்பு, நவ. 12

ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வடக்கு-கிழக்கில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

வடக்கு—கிழக்குமாகாணத்தில் பிரதேச செயலர் ரீதியாக வழங்கப்படவிருக்கும் இந்த நியமனத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை எதுவும் இன்றி ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் இந்த நியமனம் வழங்கப்படவிருக்கின்றது,

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுபபுமாறு சுல்விச்சேவை ஆணைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் வீடமைப்பு திட்டங்களில் அதிகார துஷ்பிரயோகம், ஊழல்

## முறைப்பாடுகள் வந்திருப்பதாக புளொட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

குடாநாட்டில் வீடமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களில் அதிகார துஷ்பிரயோகமும், ஊழல்களும் இடம்பெறுகின்றன என்று பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். அரச அதிபரிடம் புளொட் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இப்படிக்கேட்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் வீடமைப்பு அதிகார சபையினால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்களில் சில இடங்களில் அதிகார துஷ்பிரயோகங்களும், ஊழல்களும் இடம்பெற்று வருகின்றன என்று பொது மக்களிடமிருந்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக நாவாந்துறை மண்பிட்டி குடியேற்றத திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தில் பல ஊழல்கள் இடம்பெறுவதாக (காணிப் பங்கீட்டில்) அறிய முடிகின்றது.

இதில் அப்பகுதி கிராம சேவையாளரும் [ஜே/ 84) ஊழல் நடவடிக்கைக்குத் துணைபோவதாக அறியமுடிகிறது,

இது சம்பந்தமாக இதற்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது சில அதிகார் துஷ்பிரயோகங்கள் நடைபெறுவது தமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதாகவும் ஆனால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் மௌனிகளாக இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தாம் குறிப்பிட்ட நபர் மீது நடவடிக்கை எடுத்தால் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டு விடுவோமோ என அஞ்ச வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே தாங்கள் இதில் உடனடியாக தலையிட்டு இது போன்ற சம்பவங்கள் நடைபெறாது தடுக்கவேண்டும். அத்துடன் அரச அதிகாரிகள் தங்கள் வேலைகளை எதுவித அச்சுறுத்தலின்றியும் எவருடைய தலையீடும் இன்றியும் தொடர்வதற்கு அவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவேண்டும். உண்மையான பயனாளிகளை இனம் கண்டு அவர்கள் பயன்பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் எதிர் காலத்தில் இவ்வாறான வீடமைப்புத் திட்டங்களோ அல்லது அபிவிருத்தித்திட்டங்களோ மேற்கொள்ளப்படும் பொழுது இங்கு இயங்கும் அரசசார் பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உண்மையான பயனாளிகளை இனங்கண்டு இவ்வாறான ஊழல்களும் அதிகார துஷ்பிரயோகங்களும் இடம்பெறாமல் இருக்க ஆவன செய்வீர்களென எதிர்பார்க்கின்றோம் — என்றுள்ளது.

[இ-3-7]

## செயலமர்வுகள்

வலிகாமம் தெற்கு, நவ. 12

2000 ஆண்டில் தரம் 2, 7, 10 ஆகிய வகுப்புக்களில் ஆரம்பகல்வி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி போன்ற பாடங்களை கற்பிக்க உள்ள ஆசிரியர்களுக்கு உரிய சேவைக்கால பயிற்சி செயலமர்வுகளை இம்மாதத்தில் நடத்த வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா நடவடிக்கை எடுத்துள்ளார். (ஐ-154)

## பரீட்சை

குருநகர், நவ. 12

இலங்கை நீதிமன்ற எழுதுநர் சேவையின் 11 ஆம் தர அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-51)

## பரிசுத்தினம்

யாழ்ப்பாணம், நவ. 12

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய பரிசுத் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செல்வி யோ. செ. வஸ்தியாம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். வலய கணக்காளர் தி. சுதந்திரபாலன் பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-9)

3 ஆம் தவணைப் பரீட்சை
வினாத்தாள்கள் விடைகளுடன்
★ தரம் 1 — 5 வரை இன்று முதல்
★ தரம் 6 — 11 வரை நாளை முதல்
பெற்றுக்கொள்ளலாம்.
அடுத்த புலமைப் பரிசில் பரீட்சை 14-11-99 (ஞாயிறு) வழமையான நேரம் நடைபெறும்.
BOND யாழ் நகர்.
(70923)

ராஜா
யாழ்ப்பாணம்
ரஜனி - ரோஜா மற்றும் பலர் நடித்த
உழைப்பாளி
10-30, 2-30,
(சி/9680)

நாகம்மாள்
சுன்னாகம்
விஜய் — சாலினி நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சிகள்: 11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70814)

## சோஷலிசப் புரட்சி பொதுக்கூட்டம்

வடமராட்சி, நவ 12

ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சித் தினப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு மூத்த பத்திரிகையாளர் வீ. சின்னத்தம்பி தலைமையில் ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது.

தொழிற்சங்க வாதிகளான இ. தவராசா, சொ. சிவபாலன், பெ. கனகரத்தினம், நா. விஸ்வலிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் உரையாற்றுவார்கள். (ஐ-173)

## பற்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், நவ. 12

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஊரெழு கணேசா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு இலவசமாக பற்பசையும் தூரிகையும் இன்று வழங்கப்படவிருக்கின்றன.

டாக்டர் வ. லக்மணகுமார் அங்கு பற்சிகிச்சை முகாம் ஒன்றையும் நடத்துவார். (இ-3)

லிபேட்டி அச்சுவேலி.
ரவிச்சந்திரன் — K R விஜயா பாலாஜி நடித்த
இதயக்கமலம்
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(70831)

## பஸ் நிலையம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

உரும்பிராய் சந்திக்கு சமீபமாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையம் இன்று நண்பகல் 12 மணிக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கத்தால் திறந்து வைக்கப்படும்.

உரும்பிராயைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியமும் அவரது மனைவியான தனபாக்கியமும் இணைந்து 60 ஆயிரம் ரூபா செலவில் இந்த பஸ் நிலையத்தை அமைத்து அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் (இ-3)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், நவ. 12

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் கந்தசஷ்டி சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ''முருக மந்திரம்'' எனும் தலைப்பில் ஆசிரியர் ஆ. சிவநாதன் உரை நிகழ்த்துவார். (இ-10)

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 12

வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமனம் பெற்றுள்ள ஏழு பேருக்கும் நியமனக்கடிதம் வழங்கும் வைபவம் நேற்று பிரதேச செயலர் க. சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

வலி-மேற்கு பிரதேசசபைத் தலைவர் எஸ். திரிலோகநாதன் நியமனக் கடிதங்களை வழங்கினார். (இ-3)

## மின் விநியோகம் இடைநிறுத்தம்

வடமராட்சி, நவ. 12

கரவெட்டி கிழக்கு யார்க்கருப் பகுதிக்கான மின்சார விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அப்பகுதியில் மின்சார லைன்களில் இருந்து களவாக மின்சாரம் பலரால் பெறப்பட்டு வந்தமைக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பகுதிக்கான மின்சார விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த முதலாம் திகதி முதல் இப்பகுதிக்கான மின் விநியோகம் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

(ஐ-173).

## சமயசந்நிதி

யாழ்ப்பாணம், நவ. 12

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் யம சங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும். மாலை 3 மணிக்கு மார்க்கண்டேயர் சிவபூஜைக் காட்சியும் தொடர்ந்து யம சங்கார உற்சவம், பிராயச்சித்த அபிஷேகம் என்பன நடைபெறும். [ஐ]

## கேரதீவு வீதி திருத்தப்படவில்லை

அரியாலை, நவ. 12

கேரதீவு — நாவற்குழி பிரதான வீதியைப் புனரமைப்பதற்கு கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர்கற்கள் பறிக்கப்பட்டபோதும் இதுவரை இந்தவீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த பல வருடங்களாக குண்டும் குழியுமாக இருக்கும் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படாததினால் மக்கள் போக்குவரத்து செய்வதற்கு பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். என்று தெரிவிக்கப்பட்டது [ஐ-17]

## தகுதிகாண் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். திறந்த பல்கலைக்கழக டிப்ளோமா தொழில் நுட்பவியலாளர்களுக்கான ஆங்கில தகுதிகாண் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பிராந்திய இயக்குநர் ஆ. ச. ஞானேந்திரன் தெரிவித்தார். (இ-10-185)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தையல்நாயகி தயானந்தன்

திருமதி தையல்நாயகி தயானந்தன் அவர்கள் காலமானார்.

இவர் எந்திரி ஆ தயானந்தன் [பொறியியலாளர், மாகாண கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்.] அவர்களின் அன்பு மனைவியும், Dr. த. துஷ்யந்தன் [வைத்தியசாலை, நீர்கொழும்பு], எந்திரி த. சுயந்தன் [Austrk Ltd . ஆஸ்திரேலியா]. த. ஜெயந்தன் [மூன்றாம் ஆண்டு மருத்துவபீடம், யாழ்ப்பாணம்], த. தெய்வயானி [இரண்டாம் ஆண்டு இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 99-11-14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. தயானந்தன் [கணவர்]
பிள்ளைகள்

43, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(70933)

### கந்தப்பு சோமசுந்தரம்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், 70, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு சோமசுந்தரம் (பணக்காரன்) நேற்று 11—11—99 வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, கோபால சுதந்திரன் (கோபால் வர்த்தக, நிலையம்), தர்மலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராசா (வேல் முருகன் களஞ்சியம், தொலைத் தொடர்பு நிலையம்), நட்ராசா (S. V R. ஸ்தாபனம், கொழும்பு-12), புஸ்பவதி ஆகியோரின் மாமனாரும், ஜெய்கிஷன், ஜெயதர்ஜினி, குகதாசன், ஜெயபவன், கிருத்திகா, காயத்திரி, தர்சிகா, விசாகபவன், உதயபாஸ்கரன், தணிகைவாசன், பிரியதர்ஜினி, தீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வைமன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற பின் பூதவுடல் இன்று 12—11—99 காலை 10·00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காகக் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சோ. கோபாலசுதந்திரன்
(மகன்)

இல. 70, வைமன் வீதி,
நல்லூர்.

(70921)

B.A-Part-I B. Com-Part-I
B. A. பேராதனை
G A Q 2001 1St in Com 2001
விரிவுரைகள் 13-11-99 இல ஆரம்பமாகின்றன
விவரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)
(70931)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டரை வருட காலத்தில் படையினர் மீட்டதை ஐந்து நாள்களில் புலிகள் கைப்பற்றி விட்டனர்

## நாடாளுமன்றத்தில் ஐ. தே. க. உறுப்பினர்

கொழும்பு, நவ. 12

இரண்டரை வருடகாலம் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய பிரதேசங்களை விடுதலைப்புலிகள் 5 நாள்களில் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி அத்துக்கோறள நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வன்னிப் பெருநிலப் பரப்பில் பெரும்பகுதியை விடுதலைப்புலிகளிடம் பறிகொடுத்து விட்டு அரசாங்கம் மௌனம் சாதித்து வருகின்றது. முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் போது படையினரிடம் இருந்து மீட்ட ஆயுதங்களைக் கொண்டே விடுதலைப்புலிகள் தற்போது படையினர் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதுவரை காலமும் பல நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்களின் உயிர்கள் வீணாகப் பலி கொடுக்கப்பட்டுள்ளன

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக யுத்தச் செய்திகள் தொடர்பான தணிக்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. எனினும் வெளிநாட்டு வானொலிச்சேவைகள் மூலமும் இன்ரநெற், தொலைக் காட்சிச் சேவைகள் மூலமும் யுத்தத்தின் உண்மை நிலைகளை மக்கள் அறிந்து வருகின்றனர் — என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ தே. கட்சியின் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோண் அமரதுங்க தனது உரையில்:-

ஒட்டுசுட்டான் பகுதியில் இறந்த படைவீரர்களின் உடல்களுக்கு இறுதிக்கிரியைகள் செய்யும் வாய்ப்பு அவர்களின் பெற்றோருக்கு வழங்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு மக்களின் வாக்குகள் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவருக்கு கிடைக்கும் என நீங்கள் எதிர்பார்த்தால் அது உங்களுக்கு ஏமாற்றத்தையே பெற்றுத்தரும் — என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தனது உரையில்:-

ஓர் இடத்தைப் படையினர் கைப்பற்றும் வேளை இன்னொரு இடத்தைப் பறிகொடுக்க நேரிடும் என கடந்தவருடம் ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தேன் —

அது தற்போது உண்மையாகிவிட்டது — என்றார்.

ஐ தே. கட்சியின் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. ஆரியதாச தனது உரையில் அநுராதபுரத்தை அண்மித்த பகுதிகள் யாவும் சிங்கள அகதிகளால் நிரம்பி வழிகிறது எனக் குறிப்பிட்டார்.

(ஐ-7)

## அடுத்த ஆண்டு வேலைத் திட்டம

நெடுந்தீவு, நவ. 12

நெடுந்தீவுப் பகுதியில் அடுத்த ஆண்டில் பின்வரும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென யாழ். செயலகம் பிரமாண அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளது.

★ அரசினர் வைத்திய சாலையில் கிணறு அமைத்தல் — ரூபா 50 ஆயிரம்

★ கிழக்கு சனசமூக நிலையம் விஸ்தரிப்பு — ரூபா இரண்டு லட்சம்

★ மேற்கு ஐக்கிய தீபம் சனசமூக நிலைய அபிவிருத்தி — ரூபா ஒரு லட்சம்

★ மணற் துறைக் கேணி புனரமைப்பு — ரூபா 75 ஆயிரம்

★ வெல்லை கேணி புனரமைப்பு — ரூபா 75 ஆயிரம்

★ பொது நூலக அபிவிருத்தி — ரூபா இரண்டு லட்சம்

★ ராமன் விளாப்பு நீர்த்தடை மதகு — ரூபா ஒரு லட்சம்

★ மேற்கு அத்தாப்புல்லுக் கேணி — ரூபா 75 ஆயிரம்

(6-111)

## தேர்தல் இடாப்பில் பெயர் பதிய படிவங்கள் அனுப்பிவைப்பு

நவாலி, நவ. 12

18 வயதைப் பூர்த்தியடைந்தும் இதுவரை தம்மை ஒரு தேருநராக பதிவு செய்து கொள்ளாதவர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் பிரதேச செயலகங்கள் மூலம் கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் இப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தத்தமது கிராம சேவை அலுவலரிடம் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் தேருநர் பதிவேடுகளில் திருத்தம் செய்பவர்களும் இதற்கான படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். இதற்கான தேருநர் இடாப்புகள் சகல பிரதேச செயலகங்களிலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

[ஐ-100]

## பொதுசன உதவிப்பணம்

வலிகாமம் தெற்கு, நவ. 12

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அரசாங்க பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்கான வவுச்சர்கள் சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக செயலக நிர்வாக அலுவலர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

புதிதாக மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுடைய வவுச்சர்களும் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் தத்தம் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அத்தாட்சி மட்டைகளைப் பெற்றுக்கொண்டு தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ-152)

## 100 வீடமைப்புத் திட்டத்தில் பணியாற்றுவோருக்கு கொடுப்பனவு

வலி.கிழக்கு, நவ 12

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொண்டு நிறுவனத்தினால் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளில் 100 வீடுகள் அமைக்கும் வேலைத் திட்டத்தில் தொழில் நுட்பத் தொழிலாளிகளாகக் கடமையாற்றியவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பூர்வாங்க வேலைகளை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருவதாகவும் —

இன்னும் ஒரு வாரத்தினுள் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் —

பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)

## சுகாதாரத் தொழிலாளர்கள் தங்குவதற்கு விடுதி அமைப்பு

வலி. கிழக்கு நவ. 12

நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் நலன் கருதி 7 லட்சம் ரூபா செலவில் திருநெல்வேலி பால் பண்ணைப் பகுதியில் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

இந்த பிரதேச சபையில் தொழில்புரியும் சுகாதாரத் தொழிலாளர்கள் தங்குவதற்கு போதிய வசதி இல்லாத காரணத்தினால் இவ்விடுதியினை வடக்கு — கிழக்கு மாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வுப் பகுதியினர் 7 இலட்ச ரூபா செலவில் அமைத்து வருகின்றனர்.

ஊழியர்களுக்கு இந்த விடுதி அறைகளை வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

(ஐ-180)

## வீதிசேதம்

நெல்லியடி, நவ 12

வடமராட்சி கிழக்கில் வல்லிபுரம் பகுதியிலிருந்து நாகர்கோயில் வரையிலான பாதை கடந்த சில மாதங்களாக மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

இப்பகுதியால் வடமராட்சி கிழக்குக்கு கடமையின் நிமித்தம் சைக்கிளில் செல்லும் அரச ஊழியர்களும் வாகனங்களில் செல்வோரும் மிகவும் சிரமம் அடைந்துவருகின்றார்கள்.

இப்பாதை சீர்கெட்டு இருப்பதால் பருத்தித்துறையிலிருந்து நாகர் கோயில் வரை செல்லும் இ போ ச. பஸ் சேவை ஸ்தம்பிதம் அடையும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது

(இ-109)

## மீனவர்களுக்கு வலைகள்

நவாலி, நவ 12

அகதிகளுக்கான ஐ நா. தூதரக நுண்கருத்திட்டத்தின் கீழ் சுழற்சிமுறைக்கடனடிப்படையில் சாவற்கட்டு கடற்றொழிலாளர்கள் 60 பேருக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் சாவற்கட்டு கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் நடந்த இவ்வைபவத்தில் ஐ நா. தூதரக பிரதிநிதிகளும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர். பதவி நிலைஉத்தியோகத்தர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

[ஐ-100]

## விஞ்ஞான கூடம் அமைப்பு

நெல்லியடி, நவ 12

மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுத்திட்டத்தில் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் 8 லட்சம் ரூபா செலவில் விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இக்கூடம் இவ்வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-109)

## வேலைத்திட்ட முன்மொழிவுகள்

வலி தென்மேற்கு, நவ 12

பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்து பிரதேச சபைத் தலைவரின் சிபாரிசுடன் அனுப்பி வைக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரதேச சபைகளைக் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளுக்கு தலா 10லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

பிரதேச சபைத் தலைவர்கள் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெற்று 2000 ஆம் ஆண்டு திட்ட முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

(ஐ-185)


## அரசினர் பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

இவ்வைத்தியசாலையில் ஒரு தொகை பழைய ஓடுகள் விற்பனைக்கு உண்டு.

இவை எதிர்வரும் 20—11—99 அன்று காலை 10. 00 மணிக்கு ஏலத்தில் விடப்படும். தேவையானோர் ஏலத்தில் பெற்றுக்கொள்ளவும்.

வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரத்தினம்
பணிப்பாளர்.

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/9793)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவனான
செல்வேந்திராவின்
அன்புத் தந்தை
**செ. செல்வக்கந்தராசா**
அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆண்டு 13 உயர்தர மாணவர்கள்,
யாழ். இந்துக் கல்லூரி.

(70912)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



லயன் டாக்டர்
**க. இராஜரெட்ணம் J P.**

புங்குடுதீவு – நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவரும் தீவுப்பகுதி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கமும் படையின் தலைவரும், தீவக லயன்ஸ் கழகத்தின் உபதலைவரும், யாழ். அடைக்கலமாதா யேய்ப்புப்பணிச்சபை உறுப்பினருமாகிய

லயன் க. இராஜரெட்ணம்

அவர்கள் 5 – 11 – 99 இல் யாழ். மாவட்ட நீதிவான் திரு ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரது சமூக, சமய, மருத்துவ் சேவை மேன்மேலும் வளர்ச்சியுற மனமார வாழ்த்துகின்றோம்.

புங்குடுதீவு– நயினாதீவு ப நோ. கூ. சங்கம்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(சி/9796)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மருதனார்மடத்தில்..

## அறவழிப் போராட்டக் குழுவினால்

நடத்தப்படும்

அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களின்

## ஆக்கப் பொருள்கள் கண்காட்சி

இடம்; இராமநாதன் மகளிர் கல்லூரி
காலம்: 13 - 11 - 1999
நேரம்: காலை 10.30 மணி
தலைவர்: திருமிகு வீ. ஜீ. தங்கவேல் ஜே. பி. அவர்கள்
முதன்மையாளர்: திருமிகு ஆ. மகாலிங்கம் அவர்கள் (பிரதேச செயலர் - உடுவில்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**NVDAG.** அறவழிப் போராட்டக் குழு

(70808)

## மகளிர் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ 12

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவின் மகளிர் கல்வி அபிவிருத்தித் திட்டத்துக்கான கருத்தரங்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் 102 பெண்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் நாகரிக உலகின் நோய்களும் அதற்கான தடுப்பு முறைகளும் பற்றி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரம் கருத்துரை வழங்கினார்.

(இ-10)

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

## பிற்போடப்பட்டுள்ளது

07—11—1999 அன்று எமது கழகத்தால் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் வரும் புதிய ஆண்டின் தைத் திருநாளன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூகநிலையமும்
கொக்குவில்.

(சி/9786)

யாழ்ப்பாணம்

## அரசினர் பொது வைத்தியசாலை
## தனிப்பட்ட பாதுகாப்பு சேவைக்கான

ஒப்பந்தத்துக்கு

## விண்ணப்பம் கோரல்

யாழ் / அரசினர் பொது வைத்தியசாலைக்கு 01 - 01 - 2000 தொடக்கம் 30 - 12 - 2000 வரையிலான காலப்பகுதியின் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு அண்மைக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் வைத்திருக்கும் முன் அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 25 - 11 - 99 காலை 10.00 மணிக்கு திறக்கப்படும். மொத்தம் பதினொரு (11) பாதுகாப்பு அலுவலர்களும் 'இரு மேற்பார்வையாளர்களும் கொண்ட 12 மணி நேர மாற்றுக் கடமைக்கும் மாதாந்த கூறுவிலை கோரப்படுகின்றது.

கேள்விகளுடன் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அண்மைக்கால அங்கீகாரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்.

மேலதிக விவரங்களை காரியாலய நேரத்தில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படலாம்.

வைத்திய கலாநிதி (செல்வி)
என். கனகரத்தினம்
பணிப்பாளர்.

(சி/9784)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
### கரவெட்டி

# கேள்வி அறிவித்தல்-2000

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள், சந்தைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2000 -ம் ஆண்டு தை மாதம் 01-ந் திகதி தொடக்கம் 2000-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 19-11-1999 முற்பகல் 10.30 மணி வரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பகல் 10.45 மணிக்கு திறந்து பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் படிவத்தின் இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்கட்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் அவ்வவ் உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளிடமிருந்து 18-11-1999-ந் திகதி நண்பகல் 12.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும். கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்விகள் சமர்ப்பிப்பவர்களின் கேள்வி வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படும்.

| | சந்தைகள், இறைச்சிக்கடைகள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. | மீன்சந்தை - நெல்லியடி | 150/- | 1,000/- | 1,18,950/- |
| 02. | மரக்கறிச்சந்தை, நெல்லியடி | 1,000/- | 20,000/- | 11,19,300/- |
| 03. | கோயிற்சந்தை | 150/- | 3,000/- | 28,000/- |
| 04. | கொட்டடிச் சந்தை | 100/- | 500/- | 2,100/- |
| 05. | துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் - நெல்லியடி | 150/- | 1,000/- | 82,600/- |
| 06. | நெல்லியடி - ஆட்டிறைச்சிக்கடை இல: 01 | 100/- | 500/- | 16,400/- |
| 07. | நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல: 02 | 100/- | 500/- | 18,300/- |
| 08. | ,, ,, 03 | 100/- | 500/- | 16,350/- |
| 09. | மாட்டிறைச்சிக் கடை இல: 02 | 150/- | 3000/- | 1,92,600/- |
| 10. | ,, ,, 03 | 150/- | 3,000/- | 1,92,600/- |
| 11 | கோயிற்சந்தைஆட்டிறைச்சிக்கடை | 150/- | 500/- | 9,700/- |
| 12 | கொட்டடிச் சந்தை கடை | 100/- | 500/- | 4,300/- |
| 13. | கோயிற்சந்தை - மாட்டிறைச்சிக் கடை | 100/- | 1,000/- | 60,700/- |
| | **உடுப்பிட்டி உப அலுவலகம்:** | | | |
| 14. | உடுப்பிட்டிச் சந்தை | 500/- | 5,000/- | 2,86,100/- |
| 15. | அந்திரான் சந்தை | 150/- | 500/- | 26,700/- |
| 16. | நவிண்டில் சந்தை | 100/- | 500/- | 11,250/- |
| 17. | உடுப்பிட்டிச் சந்தைமாட்டிறைச்சிக் கடை | 150/- | 2,000/- | 1,76,100/- |
| 18. | ,, ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 6,600/- |
| 19. | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 60,100/- |
| 20. | உடுப்பிட்டி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 100/- | 500/- | 22,100/- |
| | **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 21. | துன்னாலை வடக்கு சந்தை | 100/- | 500/- | 1,800/- |
| | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 19,350/- |
| 23. | அல்வாய் தெற்கு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100/- | 500/- | 26,500/- |

சி. பசுபதி
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,
05 - 11 - 1999

(சி/9782)

## ஆயுள் ஹோம திருநாள்
### முதலாவது பிறந்த தின வாழ்த்து



## செல்வி தி. அபிராமி
### 13 - 11 - 99

பிரம்மஸ்ரீ நா. திவாகரசர்மா - ஜெயப்பிரபா தம்பதிகளின் செல்வப் புதல்வி தி. அபிராமி

தனது முதலாவது பிறந்த தினத்தை நாளை (13-11-99) சனிக்கிழமை உரும்பிராய் மேற்கு கருணாகரப் பிள்ளையார் கோயிலடியில் உள்ள தனது இல்லத்தில கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பாமார், மாமி, பெரியப்பா, பெரியம்மா. சின்ன மாமா, பெரிய மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அல்வாய் மறாம்புலம் விநாயகனின் திருவருளாலும் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையாரின் அருளினாலும் சகல கலைகளிலும் வல்லவளாகவும் நீண்ட ஆயுளுடனும் நோயற்ற வாழ்வு வாழ்ந்து என்றும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க என்றும் வளமுடன்
வளர்க என்றும் அறிவுடன்
நின்று பழகு மகிழ்வுடன்

பிரம்மஸ்ரீ நா. திவாகரசர்மா

கருணாகரப் பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய் மேற்கு.

(70882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போர்ப் பகுதிக்கு உணவுப் பாதை

மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் கடும் உணவுப் பற்றாக்குறையாலும் மருந்துப் பொருள்கள் இன்றியும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் —

ஆகையால் அப் பகுதியில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள், நிவாரணப் பொருள்கள் சென்றடைவதற்கு இரு தரப்பினரும் வழி வகுக்க வேண்டும் —

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவத் தொண்டர் நிறுவனமான எம். எஸ். எவ். விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு கேட்டுள்ளது.

போர் நடைபெறும் இடங்களில் மோதலில் ஈடுபடுபவர்களை விடப் பொதுமக்களே பெரிய அளவிலும் பல வகைகளிலும் பாதிக்கப்படுவது உண்டு. போர் உக்கிரமாக நடைபெறாத காலங்களிலேயே போர்ப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குப் போதிய உணவு, மருந்து மற்றும் பாவனைப் பொருள்கள் கிடைப்பதில்லை.

இதற்கு முன்னர் நடைபெற்ற ''ரணகோஷ'' பெரும் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 40 நாள்களுக்கு மேலாகப் போக்குவரத்துப் பாதை இல்லாமல், போர்ப் பிரதேச மக்கள் — வன்னிமக்கள் — பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதன் பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் பாதை திறக்கப்பட்டு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

ஆனால் இம் மாதம் இரண்டாம் திகதி உக்கிரப் போர் ஆரம்பமானதும் அந்தப் பாதை அடைபட்டுப் போயிற்று. அதனால் போர்ப் பிரதேசத்தில் வாழும் மக்கள் மீண்டும் பட்டினி நிலைக்கும் ஏனைய கஷ்டங்களுக்கும் ஆளாகி உள்ளனர்.

வன்னிப்பிரதேசத்தில் வாழும் மக்கள் இவ்வாறு தொடர்ந்து, அடிக்கடி பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவது மனித நேயமற்ற செயலாகும்.

குடிமக்களைச் சாவிலிருந்து பாதுகாக்கும் உணர்வு மோதலில் ஈடுபட்டுள்ள இரண்டு சாராருக்கும் தேவை. எம். எஸ். எவ். நிறுவனம் கூறுவது போல் இரண்டு தரப்புகளும் மனிதாபிமானச் சட்டங்களை மனித நேயத்துடன் மதித்துச் செயற்படவேண்டும்.

போர் நடைபெறும் வன்னிப் பிரதேசத்தில் உள்ள பொது மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப்பொருள்களை எடுத்துச் செல்வதற்குரிய பாதை ஒன்றைத் திறக்க இரண்டு தரப்புகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சர்வதேச மனிதாபிமான நிறுவனங்கள் இந்தப் பணியில் ஈடுபடுவதற்கு முன்வந்துள்ளன.

ஆகையால் இது விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்தி போர்ப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பட்டினியாலும், நோய்களாலும் இறக்காமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் மக்களைக் காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்கப் பின்னடிக்கலாகாது.

கடந்த பத்து நாள் போரினால் அப்பகுதியில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், கஷ்டங்கள் குறித்த தகவல்கள் முழு அளவில் வெளியே தெரியவரவில்லை.

அவர்களின் நிலை அங்கு பணிபுரியும் தொண்டர் நிறுவனங்களுக்கே நன்கு தெரியும். ஆகையால் எம். எஸ். எவ் நிறுவனத்தின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு போர் நடைபெறும் பகுதிக்குப் பாதை ஒன்றைத் திறக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

# "மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே"

ஆன்மாவானது மும்மலங்களோடு இணைந்துள்ளது. ஆணவமும் கன்மமும் மாயையும் சேர்ந்த சகலர் என்றும் ஆணவமும் கன்மமும் சேர்ந்த பிரளயாசலர் என்றும் ஆணவம் மட்டுமேயுடைய விஞ்ஞானகலர் என்றும் ஆன்மா வழங்கப்படும். சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று அவுணர்களும் மும்மலங்கள் போன்றவர் இவர்களை அழிக்கவே ஆறுமுகன் ஆடல் புரிந்தான்.

மாறுபடுசூரர் என்றார் அருணகிரியார். மும்மலங்களும் மாறுபடும்தன்மை வாய்ந்தவையே இந்த மாய அசுரர்களைப் பெற்றவள் மாயை. ஆகவே ஆறுமுகப் பெருமான் தமது திருவருட் சக்தியால வேற்படை கொண்டு அழித்தருளினார்.

ஆணவத்தை அழிக்க முடியவில்லை, உடனே சூரனை சேவலும் மயிலுமாக மாற்றி கொடியாகவும் வாகனமாகவும் ஆக்கிக் கொண்டார். சூரபன்மன் பெற்ற பேறு யாருமே பெற்றதில்லை. பெறக்கரிய பெரும் பேறு பெற்றவன் சூரன். எம்பெருமானைத் தாங்கும் பேறு அரியது தானே!

''கார்மாமிசை காலன்வரிற் கலபத் தேர்மாமிசை வந்தெதிரப்படுவாய் தார்மார்பவலாரி தலாரியெனும் சூர்மா மடியத்தொடு வேலவனே'' என்று கந்தரனுபூதி கூறுகிறது.

உலக மாயை வலைப்பட்டுழலும் உயிர் பேரானந்த முத்தி நிலையை எய்துவதற்கு முருகனின் திருவருள் வேண்டும். ஜீவான்மா பரமான்மாவை அடைவதற்கு பக்குவமடைய வேண்டும். அந்தப் பரிபக்குவ நிலையை எய்துவதற்கு அவன் பேரருள் கிட்ட வேண்டும்.

''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்று மணிவாசகர் கூறியது போன்று முருகப் பெருமானை வணங்குவதற்கும் அவன் திருவடிகளை அடைவதற்கும் கொடுத்து வைக்க வேண்டும். சூரன் தவ வலிமையாற் கொடுத்து வைத்தவன் தான் கந்தஷஷ்டி நாளில் கந்தனைக் கைதொழுதால் நாங்களும் கொடுத்து வைத்தவர்கள் ஆவோம்.

''புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து நவைபறு காட்சி நல்கி என்னையும் அடியனாக்கி இரு வினை நீக்கி ஆண்ட பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி''.

நாங்கள் தீயநெறியிற் செல்லாமல் நன்னெறியிலே சென்று ஒழுகுவதற்கு நம்மை நாமே பழக்கிக் கொள்ள வேண்டும்.

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி; ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி; காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி; அன்னான் சேவலும் மயிலும் போற்றி; திருக்கை வேல் போற்றி போற்றி! என்று நாவார மனமார துதித்து வழிபாடியற்றுவதற்கு திருவருள் துணை கொண்டு இயங்க வேண்டும்.

### இராசையா ஸ்ரீதரன்

வேலுண்டு வினை நீக்க; மயிலுண்டு எனைக்காக்க; யாமிருக்கப் பயமேன்? என்ற வாசகங்களை அடிக்கடி தியானிக்க வேண்டும். அந்த அரும் பேறடைவதற்கு கந்தஷஷ்டி ஒரு வழிகாட்டியாகும். முருகன் அருள் பெற்றுப் பூவுலகில் சிறந்து வாழ்வோமாக.

★

# காணாமற்போனோர் குடும்பங்கள் நஷ்டஈடு பெறுவதில் என்ன தவறு?

## ஈ. பி. டி. பி. அமைப்பு கேட்கிறது

யாழ்ப்பாணம், நவ. 12

செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக் கூட்டுக்கு உரியவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து காணாமல் போனோர் சங்கம் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாக ஈ. பி. டி. பி விசனம் தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த நஷ்டஈடுவழங்குவது தொடர்பாக ஈ. பி. டி. பி அமைப்பு ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியதும் —

ஜனாதிபதி அதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததும் —

அதன் பின்னர் இந்த விடயத்தை காணாமற் போனோர் சங்கம் கண்டித்திருந்ததும் —

தெரிந்தவையே.

அதைத் தொடர்ந்து காணாமற் போனோர் தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளக்கி ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செம்மணியில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதை எதிர்த்து காணாமல் போனோர் சங்கத்தின் சார்பில் தெரிவித்துள்ள கருத்தானது வெந்த புண்ணில வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.

கடந்த இரண்டு வருடகாலமாக தமது உறவினரின் நிலை தெரியாது அலைந்து திரிந்து வாடி வதங்கிய இக்குடும்பங்கள் தம் அன்றாட வாழ்க்கைக்கே அல்லல்படுவது இச்சங்கத்தின் தலைமைக்கு சற்றேனும் தெரியாமல் உள்ளமை மிக வியப்பாக இருக்கிறது.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் நிலையினை அறிய 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி காணாமல் போனோரின் உறவினர்கள் அனைவரையும் ஒருமுகப்படுத்தி கைதாகி காணாமல் போனோர் சங்கம் எமது கட்சியின் [ஈ பி டி பி] அனுசரணையுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சங்கத்தின் ஊடாக கைதாகி காணாமல் போனோரின் நிலையினை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டுவதன் ஊடாக அரசிற்கு அழுத்தத்தை ஏற்படுத்தி காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என அறிய விசாரணையை துரிதப்படுத்துவதும் பாதிக்கப்பட்டோருக்குநஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதும், எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடக்காமல் தடுப்பதுவுமே இச்சங்கத்தின் நோக்காக இருந்தது.

ஆனால் இன்று இந்தச் சங்கத்தின் நிர்வாகத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் துயரினைத் துடைக்க முன்வராது வேறு நிர்ப்பந்தங்களுக்காகவும், உள்நோக்கங்களுக்காகவும் ஏழைக் குடும்பங்களைத் தீனிபோட முனைவது என்றுமே ஏற்கமுடியாத ஒன்றாகும்.

கைதானோரின் நிலையை இராணுவ முகாம்களுக்குச் சென்று அறிய முடியாது துரத்தியடிக்கப்பட்டு திக்கற்று நின்ற கைதானோரின் உறவினர்களை ஒன்றுபடுத்தி யாழ் குடாநாட்டில் உள்ள பிரதான இராணுவத் தளங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களின் அவலநிலையினை தெளிவுபடுத்தியும், நேரடியாக ஜனாதிபதியைச் சந்தித்து தங்கள் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தும், சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் ஏனைய மனிதஉரிமைகள் சம்பந்தமான அமைப்புக்களுக்கும் யாழ். குடாவில் கைதாகி காணாமல்போனோரின் விவரங்களைத் திரட்டி வழங்கி வெளி உலகிற்கும் இப் பிரச்சினையை எடுத்துக் காட்டியும் இன்றுவரை காணாமல் போனோரின் உண்மை நிலையினை கண்டறியத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இக் கைது தொடர்பாக பாதிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான குடும்பத்தினருக்கு எமது கட்சியின் நிதியில் இருந்து மாதாந்த உணவுப் பொருள்களையும் மற்றும் உதவிகளையும் மேற்கொண்டு வருவதோடு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈட்டினை பெற்றுக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? சங்கநிர்வாகிகள் சிலரது நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களின் வயிற்றுப் பசியை போக்குமா? இப்படித்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

> ## நாளை
>
> ஐப்பசி 27
>
> சனிக்கிழமை
>
> திதி: பஞ்சமி
>
> முன்னிரவு 7. 17வரை
>
> நட்சத்திரம்: பூராடம்
>
> மாலை 7. 16 வரை
>
> ஸ்கந்த பஞ்சமி
>
> சுபநேரம்: 3.07 – 4.37
>
> ராகுகாலம்: 9.07 – 10.37
>
> (பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

> ### உதயவாக்கு
>
> பிறருடைய குற்றங்களைக் காண முயல்பவன் அரைமனிதன் தன் குற்றங்களை எண்ணித்திருந்துபவனே, முழு மனிதன்.
>
> — சான்றோர் வாக்கு

## நூலகசேவை இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ, 12

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட நூலக சேவை இறுதிப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை நாளை சனிக்கிழமை மாலை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ]

## நிவாரண விநியோகம்

அரியாலை, நவ. 12

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு முத்திரையின் 80 ஆவது 'ஏ', 'பி' புள்ளிகளுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் கிளைகள் ஊடாக நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன

அரிசி, சீனி, மைசூர்ப்பருப்பு, ஹைலண்ட் பால்மா பைக்கற் என்பன நிவாரணத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

[ஐ-17]

### ஆரம்பக்கல்விச் சீர்திருத்தத்தின் கீழ்

# நாடகப் போட்டிகளை நடத்துமாறு அறிவிப்பு

வலிகாமம்தெற்கு, நவ. 12

ஆரம்பக்கல்விச் சீர்திருத்தங்களைக் குறிக்கோளாகக் கொண்டு பாடசாலை நாடகப் போட்டிகள் நடத்தப்பட வேண்டுமெனவடக்கு-கிழக்கு மாகாணக் கல்விபண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு செயலாளர் அறிவித்துள்ளார்.

இந் நாடகப்போட்டிகளை நடத்துவதன்மூலம் ஆரம்பக் கல்வி மாணவர்களது இல்பான ஆற்றல்விருத்தியை வளர்க்கமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரின் பணிப்புரையைத் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளில் பாலர் நாடகப் போட்டிகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களைக்கேட்டுள்ளனர்.

வலிகாமம் கல்வி வலயத்தில் டிசம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு முன் சிறுவர் நாடகங்களை நடத்துமாறு கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## கொடுப்பனவு கிடைத்தது

யாழ்ப்பாணம், நவ 12

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவின் ஒரு பகுதி கடந்த மாதம் வழங்கப்பட்டது.

இக்கொடுப்பனவுக்கென 9 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. [ஐ-5]

## சமுர்த்தி அலுவலர்கள் நியமனம்

புதிய சமுர்த்தி அலுவலர்கள் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த 11-02-98 இல் வழங்கப்பட்ட சமுர்த்தி நியமனங்களின் போது நிரப்பப்படாது இருந்த இடங்களுக்கே புதிய சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் 10-11-99 முதல் நியமனம் பெற்றுள்ளனர். (ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானப் பேரழிவைத் தடுக்க வன்னிக்குப் பாதை திறவுங்கள்

## எம். எஸ். எவ். அவசர கோரிக்கை

கொழும்பு, நவ. 12

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை மனிதாபிமான உதவி நிறுவனங்கள் கொண்டு செல்வதற்கான பாதை ஒன்றைத் திறப்பதற்கு சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

பிரான்ஸின் மருத்துவ தொண்டர் நிறுவனமான எம். எஸ். எவ், நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் மாஷல் வன்சோயெஸ் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

இலங்கையின் வடபகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நடைபெறுகின்ற கடுமையான சண்டைகள், அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான விடயங்கள் குறித்து எம். எஸ் எவ். நிறுவனம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது.

போர் தொடர்ந்து இடம் பெறுமேயானால் யுத்தப் பிரதேசத்தினுள் இருக்கும் மக்கள் கடும் உணவுப் பஞ்சத்தையும், மருத்துவ வசதிகள் இல்லாத அவல நிலையையும் எதிர்கொள்ள வேண்டி வரும்.

சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் யுத்தப் பிரதேசத்தில் உள்ள பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சென்றடைவதை உடனடியாக உறுதி செய்ய வேண்டும். இராணுவமும் புலிகளும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களை மதிக்க வேண்டும்; அதன்படி செயற்படல் வேண்டும்- அப்பாவிப் பொதுமக்களுக்குக் காயம் ஏற்படுத்தும்; உயிரிழப்புக்கள் ஏற்படுத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

இரு தரப்பினரும் பொது மக்களின் உரிமைகளை மதிக்கவேண்டும். தாக்குதல் சம்பவங்களின்போது பொது மக்கள் இலக்குகளாக மாறுவதைத் தவிர்க்க வேண்டும். கடந்த 3 ஆம் திகதி முல்லைத்தீவு பள்ளியடிக் கிராமத்தில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததன் காரணமாக 3 சிறுவர்கள் காயமடைந்து மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் பாடசாலை விட்டுவிடுதிரும்பிக்கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் சிக்கிய 63 வயது வயோதிபர் ஒருவரும் காலில் காயமடைந்தார். அவர் தனது அங்கம் ஒன்றை இழக்கவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

இதேபகுதியில் அன்றைய தினம் பிற்பகல் அளவில் விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டதில் 11 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் 6 பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தனர். 7 ஆவது நபரும் மல்லாவி வைத்தியசாலையில் பின்னர் மரணமடைந்தார்.

இதனிடையே மல்லாவியிலும் புதுக்குடியிருப்பிலும் செயற்பட்டு வரும் எம். எஸ். எவ். நிறுவனத்திடம் உள்ள மருந்துகளின் கையிருப்புக் குறைந்து வருகின்றது-

நாட்டின்வட, தென் பகுதிகளில் சண்டைநடைபெறுகிறது இதனால் நிறுவனத்தினர் ஏனைய பகுதிகளுக்குச்செல்ல முடியாது தனிமைப் படுத்தப் பட்டுள்ளனர். இருப்பினும் நிறுவன சேவையாளர்கள் தம்மால் முடிந்தளவு இப் பகுதிகளில் சேவையாற்றிவருகின்றனர். ஆயினும் மருந்துப் பொருள்கையிருப்பு போதியளவு இல்லை.

எனவே தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுமாயின் இந்தப் பகுதிகளில் பஞ்சம், பட்டினி, மருந்துப் பற்றாக்குறை ஏற்படும். எனவே பொதுமக்களின் நன்மை கருதி யுத்தத்தை நிறுத்தி உணவுகொண்டு செல்வதற்கான பாதைஒன்றைத் திறக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## சுகாதாரக் கருத்தரங்கு

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட உணவு சம்பந்தப்பட்ட சகல வர்த்தக நிலைய உறுப்பினர்களுக்குமான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை கொக்குவில் பொது நூலக கேட்போர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசபையும் பொதுச் சுகாதாரப் பகுதியினரும் இணைந்துஇக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களில் உணவு சம்பந்தமான பாவனைப் பொருள்களை கையாளும் முறைகள் தயாரிக்கும் முறைகள் பாதுகாத்து வைக்கும் முறைகள் என்பன தொடர்பாக கருத்தரங்கில் விரிவாக விளக்கப்பட உள்ளது. (ஐ-180)

## செயல்திட்டம்

வலிகாமம் தெற்கு, நவ. 12

யுனிசெவ் நிறுவன ஆதரவுடனான ஆரம்பக் கல்வி மேம்பாட்டுச் செயற்றிட்டம் மற்றும் இழந்த கல்வியை மீட்டல் செயற்பாட்டுச் செயலமர்வு ஆகியன நாளை சனிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது,

தரம் 3, 4, 5 ஆகியவற்றுக்கான மொழி, கணிதம், சுற்றாடல் ஆகிய பாடங்களில் இந்த செயலமர்வு இடம் பெறும்.

மேற்படி வகுப்புகளுக்கான ஆங்கில பாட செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

(6-162)

## கந்தசஷ்டி

வலிகாமம் தெற்கு, நவ. 12

சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோயிலில் சென்ற திங்கட்கிழமை முதல் கந்த சஷ்டி விழா மாலை வேளைகளில் விசேட அபிஷேகம் பூசைகளுடன் நடை பெற்று வருகின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை மூன்று மணிக்கு சூரசங்காரமும், மறு நாள் திங்கட்கிழமை மாலை நான்கு மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

[ஐ-152]

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 11 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலகரீதியாக வருமாறு:

### யாழ்ப்பாணம்

(104613ஏ), (1124541ஏ),
[1124541பி), (1124541சி],
(115883ஏ), (116017ஏ],
(118014ஏ], [118014பி],
[118014சி], [118016ஏ],
[118016பி], (118016சி],
[118257ஏ],
[120444ஏ], [120465ஏ],
[120482ஏ], [120482பி],
[120482சி), [120528ஏ],
[120528பி], [120554ஏ],
]120686ஏ], [120727ஏ],
[120762ஏ], 122445ஏ],
[122453ஏ],
(122453பி), (122470ஏ),
(122470பி), (122470சி),
(122470டி), (122470ஈ),
(122470எப்), (122483ஏ),
(122540ஏ), (122558ஏ)
(122837ஏ), (122837பி),
(123675ஏ),
(124463ஏ), (124472ஏ),
(124480ஏ), (124481ஏ),
(124482ஏ), (124482பி),
(124482சி), (124482டி),
(124490ஏ), (124493ஏ),
(124507ஏ), (124507பி),
(124510ஏ),
[124515ஏ], [124515பி],
[124515சி], [124518ஏ[,
(124523ஏ[, [124530ஏ],
(124531ஏ), [124531பி],
[124531சி], [124531டி],
[124531ஈ], [124532ஏ],
(124533ஏ], (124547ஏ],
[124547பி), (124553ஏ],
(124553டி], [124553சி]'
(124553பி], [124557ஏ],
[124557 பி), (124557சி),
(124557டி[, [124563ஏ),
(124563பி[, (124564ஏ),
(124569ஏ], [124571ஏ[,
[124585ஏ], [124585பி],
[124585சி/, [124594ஏ],
[124594பி], [124595ஏ],
[124595பி], [124597ஏ],
[124597பி], [124597சி],
[124598ஏ], [124609ஏ],
[124620ஏ], [124626ஏ],
[124628ஏ], [124633ஏ],
[124635ஏ], [124646ஏ],
[124654ஏ], [124657ஏ],
[124661ஏ], [124661பி],
[124663ஏ], [124663பி],
[124670ஏ], [124670பி],
[124680ஏ], [124682ஏ],
[124682பி], [124682சி],
[124682டி], [124683ஏ[
[124696ஏ], ]124704ஏ],
[124704பி], ]124704சி]|
[124704டி], [124706ஏ],
[124708ஏ], [124721ஏ]
[124725பி], [124729ஏ],
[124731ஏ], ]134735ஏ],
[124736ஏ], [124737ஏ],
[124746ஏ], [124750ஏ],
]124753ஏ], [124753பி],
[[124756ஏ], [124761ஏ]
,124784ஏ], [124800ஏ]
(124800பி], [124800சி]
(124803ஏ), 114803பி),
(124803சி), 124809ஏ),
(124831ஏ), (124840ஏ),
[124842ஏ], [124847ஏ[,
[124848ஏ], ]124859ஏ],
]124859பி[, [124868ஏ],
[124882ஏ], [124883ஏ[,
]124943ஏ[, [124957பி],
[126517ஏ], [122564ஏ],
[122564பி[, [122564சி],
(122564டி), (122565ஏ),
(125565பி), [122592ஏ),
(122592பி), (122592சி),
(122669ஏ], (122669பி],
[122678ஏ], [122635ஏ]
(122694ஏ), (122694பி),
122694சி) (122703ஏ),
122705ஏ), (122720ஏ),
(122720பி), (122720சி),
(122720டி), (122720ஈ),
(122745ஏ), (122745பி),
(122745சி), (122764ஏ),
(112770ஏ), (122771ஏ),
(122771பி), (122771சி),
(122772ஏ), (122777ஏ),
(122777பி), (122784ஏ),
(122806ஏ), (122806பி),
(122815ஏ),
124706பி) [(124725ஏ).

### கோப்பாய்

[122660ஏ[, [122849ஏ[,
[122849பி].

### நல்லூர்

[118129ஏ[, [120751ஏ[,
[122601ஏ[, [122648ஏ],
[122795ஏ], [122873ஏ],
[122873பி[, [124505ஏ[,
[124543ஏ], [124560ஏ],
[124560பி[, [224590ஏ],
[124590பி], [124592ஏ],
[124823ஏ].

## மரக்கறி விதை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 12

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் உள்ள சிறுவர் அமைப்புக்களுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் மரக்கறி விதைகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)


## யா/ கச்சாய் அ. த. க. பாடசாலை
## சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி பாடசாலையில் 11 - 11 - 1999 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் விவரம்

அன்பளிப்பு

1 ஆம் பரிசு – 35 புதிய லுமாலா துவிச்சக்கரவண்டி
வீரபத்திரர் ச. ச. நிலையம், கெற்பேலி.

2 ஆம் பரிசு – 534 திரு. ச. வேலுப்பிள்ளை
கட்டட ஒப்பந்தகாரர், வெள்ளாம் போக்கட்டி.

3 ஆம் பரிசு – 1943 திரு. செ, ஜெகநாதன்
நாதன் ரெக்ஸ்ரைல்ஸ், சாவகச்சேரி.

ஆறுதல் பரிசுகள்:- 2458, 2301, 244, 588, 1092, 1837, 132, 2455, 1805, 2365

மேற்படி பரிசுகளுக்குரியவர்கள் சீட்டுக்களைச் சமர்ப்பித்து 18-11-99 இற்கு முன்னர் எமது பாடசாலையில் பரிசினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி சீட்டிழுப்புக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

விளையாட்டுத்துறை அபிவிருத்திக் குழுவும்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்.

(70927)



## யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
## பரிசளிப்பு விழா - 1999

தலைவர்: திரு. அ. நடராசா (அதிபர்)
இடம்: மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபம்
காலம்: 13 – 11 – 1999 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி

பிரதமவிருந்தினர்:- திருமதி R. இருதயநாதன்
[பிரதிக் கல்விப்பணிப்பாளர், நிர்வாகம், வலயம் வலிகாமம்]

சிறப்பு விருந்தினர்கள்:- திரு. K. தனபாலசிங்கம்
[உதவிக் கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய்க் கோட்டம்]
திரு. G. V. இராதகிருஷ்ணன்
[உதவிக்கல்விப்பணிப்பாளர் தீவகவலயம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், பெற்றோர்.

விளம்பர அன்பளிப்பு:
கிருஷ்ணா 'கோழிப்பண்ணை மற்றும் பலசரக்குப் பொருள்கள், கோழித்தீன் மருந்து வகைகளுக்கு

கிருஷ்ணா பாம்
விதானை வளவு, மானிப்பாய்.

(70925)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாஸ்ஷெரிப்பிற்கு மரணதண்டனை?

## இராணுவ ஆட்சியாளர்கள் முயற்சி!

இஸ்லாமாபாத், நவ. 12

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் பயணம் செய்த விமானத்தை கடத்த முயன்றது, மற்றும் அவரை கொலை செய்யத் திட்டமிட்டது ஆகிய குற்றங்களுக்காக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று இஸ்லாமாபாத் தகவல்கள் தெரிவிக்கப்றன.

கடந்த மாதம் 12ஆம் திகதி ஜெனரல் முஷாரப் இலங்கையில் இருந்து பாகிஸ்தான் திரும்பிக் கொண்டிருந்த சமயம் அவரது விமானம் தரை இறங்குவற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் நீண்ட நேரம் வானில் வட்டமிட்ட விமானம் விமான நிலையத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னரே தரை இறங்கியது.

இதனை அடுத்து துரிதகதியில் நடவடிக்கை எடுத்த ஜெனரல் முஷாரப் நவாஸ் ஷெரிப் அரசை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியதுடன் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை வீட்டுக்காவலில் வைத்துள்ளார்.

தற்போது அவர் மீதும் அவரது அரசியல் சகாக்கள் ஐவர் மீதும் இராணுவ நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜெனரல் முஷாரப்பை அவரது விமானத்துடன் கடத்த முயன்றதாகவும் —

அவரை கொலை செய்வதற்கு சதி முயற்சி செய்ததாகவும்—

இராணுவ நீதிமன்று ஒன்றில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணைகள் முடிவுற்ற பின்னர் நவாஸ் ஷெரிப்புக்கும் அவரது அரசியல் தோழர்களுக்கும் மரணதண்டனை அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-6)

# பேர்ளின் சுவர் இடிக்கப்பட்ட 10 ஆவது ஆண்டு நினைவுநாள்

பேர்ளின், நவ, 12

கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் பிரித்துவந்த பேர்ளின் சுவர் வீழ்ந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் தினத்தை ஜேர்மனிய மக்கள் கடந்த செவ்வாயன்று மிகக் கோலாகலமாக கொண்டாடினர்.

1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி பேர்ளின் சுவர் வீழ்த்தப்பட்டது. அதை தொடர்ந்து கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் ஒன்றாக இணைந்து இன்றைய ஜேர்மனி உருவானது.

இதனை நினைவுகூருமுகமாக இடம்பெற்ற கொண்டாட்டங்களில் சுமார் 30ஆயிரம் மக்கள் கலந்துகொண்டனர். முன்னாள் சோவியத் தலைவர் மிகைல் கொபர்ச்சேவ் மற்றும் முன்னாள் அமெரிக்க, ஜேர்மன் தலைவர்களான ஜோர்ஜ்புஷ், ஹெல்மட்கோல் ஆகியோரும் இந்தக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டனர்.

அதேசமயம்—

நாஸிகளால் ஜேர்மனியில் வாழ்ந்த யூதர்கள் கொலை செய்யப்பட்ட தினமும் அன்று நினைவுகூரப்பட்டது. 1938 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி ஹிட்லரின் நாஸிகளால் பெருந்தொகையான யூதர்கள் கொலைசெய்யப்பட்டனர்.

(ஐ-6)

# தமிழீழம் அமைவதன் மூலமே தமிழருக்கு விடிவு கிட்டும்

## ராமதாஸ் தெரிவிப்பு

சென்னை, நவ. 12

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அது தமிழீழம் அமைவதனால் மட்டுமே முடியும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் எஸ். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

வெளி நாடுகள் பலவற்றிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருக்கும் ஈழத்தமிழர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி நிம்பதியாக வாழவேண்டுமானால் அது தனித் தமிழீழம் ஒன்று அமைவதன் மூலமே முடியும். அதனையே பாட்டாளி மக்கள் கட்சியும் தனது கொள்கையாகக் கடைப்பிடித்து வருகிறது — எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் எந்த வகையாக தொடர்புகளும் இல்லை எனக் கூறிய அவர், தமிழீழம் அமைய வேண்டும் என்பதில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும் அடங்கியுள்ளது எனவும் தெரிவிந்தார்.

இதேவேளை—

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டியது இந்திய அரசின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆட்சிக் கலைப்பை ஆட்சேபித்து

# பாக். முஸ்லிம் லீக் கட்சி வழக்குத் தாக்கல் செய்யும்

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரிப் தலைமையிலான அரசாங்கத்தை இராணுவம் பதவி கவிழ்த்ததை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக நவாஸ் ஷெரிப்பின் முஸ்லிம் லீக் கட்சி தெரிவித்துள்ளது.

தனது அரசும் அரசியல் சாசனமும் தேசிய நாடாளுமன்றமும் மாகாண சட்டமன்றமும் மீண்டும் நிலை நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரி மனு தாக்கல் செய்யப் போவதாக முஸ்லீம் லீக் நேற்று முன்தினம் அறிவித்தது.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது

அதேசமயம் —

தனது கணவர் நவாஸ் ஷெரிப்பைப் பார்த்துப் பேசுவதற்கு இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதி . வழங்கவில்லை எனத் தெரிவித்து நவாஸ் ஷெரிப்பின் மனைவி உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார்.

(ஐ-6-9)

# காஷ்மீர் எல்லையில் மீண்டும் இந்திய - பாக் படைகள் மோதல்

புதுடில்லி, நவ. 12

காஷ்மீரில் இந்தியஎல்லைக் கோட்டுப் பகுதியில் கடந்த செவ்வாய் இரவு முதல் இந்தியப் படையினருக்கும் பாகிஸ்தான் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த மேசதல்களின்போது நேற்று வரை 17 பாகிஸ்தான் படையினரும் ஒரு கப்டன் உட்பட 4 இந்தியப் படையினரும் கொல்லப்பட்டதாக இந்தியா தெரிவித்தது.

காஷ்மீர் பகுதியில் உள்ள பௌலத் என்ற இந்திய இராணுவ நிலையை பிடிப்பதற்கு பாகிஸ்தான் படையினர் முயன்றதை அடுத்து இந்த மோதல் வெடித்ததாகவும் —

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் வேறு சில இடங்களிலும் இருதரப்பினரும் பரஸ்பரம் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் —

இந்திய இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பி. எஸ். எஸ். பிற்ரா தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இந்திய இராணுவ நிலைகள் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும் என்றும் அவர் கூறினார்.

[ஐ-6-9]

### சோனியா காந்தி குடும்பத்துக்கு

# ‘கறுப்பு பூனை’ பாதுகாப்பு மேலும் 10 ஆண்டுகள் நீடிப்பு

புதுடில்லி, நவ. 12

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு நீடிப்பது என இந்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சோனியா காந்தியினதும் அவரது குடும்பத்தினரதும் உயிருக்கு ஆபத்து உள்ளது என்பதால் அவர்களுக்கு கறுப்பு பூனைப் படைப்பிரிவின் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது. சாதாரணமாக இந்திய அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை வி— இது பல மடங்கு அதிகமாகும்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளையே இன்னும் 10 வருடங்களுக்கு நீடிப்பது என அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அதேசமயம் —

இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பையும் நீடிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தேவை ஏற்படின் இது குறித்து அவசர சட்டம் கொண்டு வரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

[ஐ-6]

## ஆர்ப்பாட்டம்

காபூல், நவ. 12

ஆப்கானிஸ்தான் மீது ஐ. நா. பொருளாதாரத் தடை விதிக்க உள்ளதை எதிர்த்து ஆப்கானிஸ்தானின் யேற்குப் புறநகர் ஒன்றில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தானியர்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த நகரிலிருந்த ஐ. நா. அலுவலகம் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கல் வீச்சு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தான்சானியா மற்றும் கெனியா ஆகிய நாடுகளின் அமெரிக்கத் தூதரகங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புள்ளவர் என்று அமெரிக்காவால் தேடப்படும் ஒஸாமா பின் லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும்படி ஐ. நா. கோரியுள்ளது.

அவ்வாறு ஒப்படைக்கப்படாத பட்சத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆப்பானிஸ்தான் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கப்போவதாக ஐ. நா. அறிவித்துள்ளது.

(ஐ-6-9)

# மலேசிய நாடாளுமன்றம் திடீரெனக் கலைப்பு

கோலாலம்பூர், நவ. 12

மலேசிய நாடாளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டது, இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்துக்கான புதிய தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய மன்னரை அவரது மாளிகையில் சந்தித்த பிரதமர் மஹதிர் முகமட் நாடாளுமன்றத்தைக் கலைப்பது குறித்து அவருடன் பேச்சு நடத்தினார் அதனைத் தொடர்ந்து நேற்று நாடாளுமன்றைக் கலைப்பதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மலேசியாவின் முன்னாள் துணைப் பிரதமர் அன்வர் இப்ராஹிம்மின் மனைவி தலைமையிலான நீதிக் கட்சி உள்ளடங்கிய நான்கு எதிர்க் கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக கூட்டணி அமைத்துள்ளன. இந்தக் கூட்டணியின் பலத்தை முறியடிப்பதற்காகவே குறிப்பிட்ட காலத்துக்கு 8 மாதம் முன்னர் தேர்தல்களை நடத்த மஹதிர் முகமட் முடிவு செய்துள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

(ஐ-6-9)

## உலக அரங்கில்

# உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

புதுடில்லி, நவ. 12

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் புயலால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 7ஆயிரத்து 500 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் கரையோர மாவட்டம் ஒன்றில் இருந்து 4 ஆயிரம் சடலங்கள் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளன. சடலங்களை அகற்றும் முயற்சிகளில் உதவிப் பணியாளர்கள் துரிதமாக செயற்பட்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்றும்—

எனினும் அந்த எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டாது எனவும்— அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-6-9)

# காங்கிரஸ் தமிழகப் பிரிவு தலைவர் பதவி யாருக்கு?

## பலர் களத்தில் குதிப்பு

சென்னை, நவ. 12

காங்கிரஸ்கட்சியின் தமிழ் நாட்டுப் பிரிவுத் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு 24-க்கும் மேற்பட்டவர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

கடந்த தேர்தலில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் படு தோல்வி அடைந்திருந்தது.

இதைத் தொடர்ந்து தற்போதைய தலைவர் குமரி அனந்தனை வெளியேற்றவும்—

தலைவர் பதவியைக் கைப்பற்றவும்— பலர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவோம் என்ற உறுதி மொழிகளை வழங்கி ஆதரவு திரட்டும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறும் கட்சியின் கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-3)

# ஊனமுற்ற மாணவர்களின் விவரங்கள் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு, நவ. 12

ஊனமுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கண்பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், ஊனமுற்றவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க உள்ளது.

இதன்பொருட்டு மேற்படி கல்வி அமைச்சு பாடசாலைகளில் கல்வி பயிலும் கண்பார்வையற்றவர்கள், ஓரளவு பார்வை உள்ளவர்கள், காது கேளாதவர்கள், ஓரளவு கேட்கும் சக்தியுடையவர்கள் கால், கை ஊனம் உடையவர்கள் போன்றோரின் பெயர் விவரங்களையும் கற்கும் தரங்களையும் திரட்டி வருகின்றது.

(ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மீன்தொட்டிக்குரிய அலங்காரப் பொருள்கள், மோட்டர்கள், ஸ்ரிக்கர்கள், பில்ரர், வெளிநாட்டு மீன் உணவு வகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஐ. அருளானந்தம் (குட்டி) 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

[70867]

நல்ல நிலையில்உள்ள பதிவு செய்யப்பட்ட Honda, MB-5, மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரவி S M ஹாட்வெயாஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [70903)

நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி [Sisil R 80] விற்பனைக்கு உண்டு.தொடர்பு இல. 150, நெடுங்குளம்வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T P 2894 கிழமை நாள்களில் 4 மணிக்கு பின்னரும், விடுமுறை நாள்களிலும் பார்வையிடலாம்.

[70908]

### இலகு திருமண சேவை

1971 மகம் Accountant Australiaமணமகனுக்கு B Com. Computer மணமகளும் 1968 செவ்வாயற்ற ஆயிலியம் Norwa y 1966 விசாகம், 1969 புனர்பூசம் Swiss 7 செவ்வாய்காரர்களுக்கு மணப்பெண்கள் தேவை. துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

[70889]

### தவறிவிட்டது

தம்பிராசா இந்திராணி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (0906005442) யாழ். நகருக்கும், கலட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இ. மங்கையர்க்கரசி, ராஜா மில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(70910)

### விற்பனைக்கு

எம்மிடம் புதிய மணவறைகள் மற்றும் கடைப்பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரிகள் இரண்டு, நல்ல நிலையில் உள்ள ரயர் வண்டில் மாட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அனுஷா, கே கே. எஸ் வீதி, கோண்டாவில். [70864]

### வாடகைக்குத் தேவை

நல்லூர் சுற்றாடலில் வீரமாகாளி கோயிலுக்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு:- திருமதி ச. நாகராசாஐயர் 111/3, கோயில் வீதி, நல்லூர். (70899)

### மணமகள் தேவை

கொழும்பு தனியார் வங்கியில் உயர்பதவி வகிக்கும் யாழ். கௌரவ சைவ குடும்பத்தைச் சேர்ந்த கிரக தோஷம், கிரகபாவம் அற்ற நல்லதோற்றமும் அழகும் உள்ள 31 வயதான மணமகனுக்கு 25 வயது அழகும் படிப்பும் உள்ள மணமகள் தேவை. சாதகக்குறிப்பு அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல. 969, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (70909)

64 ஆம் ஆண்டு கொம்பியூட்டர் எஞ்ஜினியர் 7 இல் செவ்வாய் கனடா. 73 ஆம் ஆண்டு உதயத்தில் செவ்வாய் லண்டன், 66 ஆம் ஆண்டு 12 இல் செவ்வாய் நோர்வே (வந்து நிற்கின்றார்) ஆகிய நாடுகளிலுள்ள மணமகனுக்கும் பிரான்ஸ், சுவிஸ். ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள மணமகன்களுக்குமணமகள்மார்தேவை. அபிராமி திருமணசேவை ஆடியபாதம் சந்தை வீதி, 1 ஆம் ஒழுங்கை, கொக்குவில். (70911)

## சிவதீட்சை

வலிகாமம் தெற்கு, நவ. 12

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரின் ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை சைவ மக்களுக்கான சிவதீட்சை வழங்கப்பட உள்ளது. பொதுமக்களும் அயற்கிராம மக்களும், பாடசாலை மாணவர்களுமாக பலர் இதில் கலந்து கொண்டு சிவதீட்சை பெற உள்ளனர்.

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் வருடம் தோறும் இவ்வாறான சிவதீட்சையை மக்கள்பெற உதவி வருகின்றனர்; (ஐ-152)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்
1997 / 1998

பொதுக்கலைமாணி
பகுதி 1 - 1998

வணிகமாணி
பகுதி 1 - 1998

சிறப்புக்கலைமாணி
பகுதி 1 - 1998

மேற்படி பரீட்சைகள் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் (1999-11-20) ஆரம்பமாகின்றன. இப்பரீட்சைகளுக்காக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி அட்டைகளையும் நேர சூசிகளையும் வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் 1999—11—15 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகள் வவுனியா வளாகத்திலும் நடைபெறும். வவுனியா வளாகத்தில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் வளாகத் தலைவருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்

1999-11-11

[சி/9794]


## சுயதொழில் கடன் உதவி

நெடுந்தீவு, நவ. 12

நெடுந்தீவில் சுயதொழில் முயற்சிக்கான கடன் உதவிகள் கிராமிய வங்கி மூலம் அண்மையில் வழங்கப்பட்டன.

ஐ நா. அபிவிருத்திப் பிரிவின் நுண்கருத்திட்டத்தின் கீழ் கடந்த திங்கட்கிழமை முதலில் ஐந்து பயனாளிகள் கடனுதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந் நிகழ்ச்சியில் ஐ நா. அபிவிருத்தித்திட்டப் பிரதிநிதிகளும் நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தலைவர் நா. சங்கரப்பிள்ளையும் கலந்து கொண்டார்கள். த்திட்டத்தின் கீழ் மேலும் 95 பயனாளிகள் பயன்பெறவுள்ளனர்.

(ஐ-111)

## விபத்தில் காயம்

பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்தியில் இடம்பெற்ற தட்டிவான்— சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்தவர்களும், சைக்கிளில் சென்றவர்களுமான மதியாபரணம் வசுகி [வயது12) இவரது சகோதரர் மதியாபரணம் லக்ஷன் [வயது4] ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் லக்ஷன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

[ஐ-15]


தொலைத் தொடர்பு சேவைகள்

கௌரி தொலைத் தொடர்பு சேவை

போட்டோப் பிரதி, லெமனேற்றிங்
இரவு பகல் சேவை
(கே. கே. எஸ். வீதி, மருதனார் மடம்.)

உள்ளூர்: - பக்ஸ் } 070 -- 212427
வெளியூர்: — பக்ஸ் :— } 0094 - 70 - 212427

வாடிக்கையாளரின் நலன் கருதி மங்களகரமான சுப வேளையில் எமது கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

கபிலன் தொலைத் தொடர்பு சேவை
Kapilan Communication

இடம்: கே.கே எஸ். வீதி, றொட்டிபாலடி, மருதனார்மடம்.
நாள்: வெள்ளிக்கிழமை 12 11—99 (இன்று)
நேரம்: காலை 8. 36 — 10 24 மணி வரை

தொலைத் தொடர்பு இலக்கம்
உள்நாடு:- 070 -212718 வெளிநாடு: -0094 70 212718
தினமும் இரவு பகல் சேவை எமது சேவை நிரந்தரம்
தனிரகம்!
(70918) உரிமையாளர்.


# நெடுந்தீவு மின்விநியோகம் விரைவில் மின்சார சபையிடம்

## ஆலோசனைக் கூட்டத்தில் இணக்கம்

நெடுந்தீவு, நவ. 12

நெடுந்தீவுக்கான மின் விநியோகச்சேவையை இலங்கை மின்சாரசபையிடம் கையளிக்கவும் —

பிரதான விதியைத் துரிதமாகப் புனரமைக்கவும் — நடவடிக்கை எடுப்பதாக நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரின் உதவி ஆணையாளர் ஏ.சி செபநாயகம் தெரிவித்தார்.

பிரதேசசபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், பல நோ. கூ. சங்கத்தலைவர் நா. சங்கரப்பிள்ளை, முன்னாள் கிராம அலுவலர் எஸ் கணபதிப்பிள்ளை ஆகியோர் நெடுந்தீவில் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உதவி ஆணையாளரிடம் விளக்கிக் கூறினார்கள்.

நெடுந்தீவு விவசாயிகள் சங்கம். கால்நடை வளர்ப்போர் சங்கம், மீனவர் சங்கங்கள் உட்பட பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ-111)

## கிராமிய அபிவிருத்திப் பயிற்சி வகுப்பு

நெடுந்தீவு, நவ. 12

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமிய அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் கடந்த திங்கட்கிழமை முதல் மூன்று தினங்கள் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றன.

வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ் இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

திருகோணமலை திட்டமிடல் உத்தியோகத்தர் எஸ். பாலகிருஷ்ணன் யாழ். மாவட்ட திட்டமிடல் உதவி உத்தியோகத்தர் கே. செல்வரத்தினம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கங்களைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். [ஐ-111]

## தென்னையால் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ.12

கள் சீவுவதற்காக தென்னை மரத்தில் ஏறிய ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

கைதடி மேற்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வே. க. கிருஸ்ணன்(வயது 55)என்பவரே மரணமானவராவார்.

கடந்த 9 ஆம் திகதி மரத்தால் விழுந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று அங்கு மரணமானார்.

சடலம் மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

[ஐ-15]

## தையல் பயிற்சி நிலையம் திறப்பு

நெல்லியடி, நவ. 12

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கப்புதூ பகுதியில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த 4ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

திரு க.சந்தவனம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் செ ஸ்ரீநிவாசன், யாழ். மாவட்ட சர்வோதய செயல் திட்ட நிறைவேற்றுநர் எஸ் வீ. சங்கரப்பிள்ளை ஆகியோர் நாடாவெட்டி பயிற்சிநிலையத்தைத் திறந்து வைத்தனர்.

கப்புதூப் பகுதி கிராம சேவை அலுவலர் கா.ஆனந்தராசா, சமுர்த்தி முகாமையாளர்களான கி. சிவகணேசமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

[ஐ-109]

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமுத்து பொன்னையா

பெரியவிளான், இளவாலை

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து பொன்னையா வியாழக்கிழமை (11 - 11 - 99) காலமானார்.

அன்னார் காலம்சென்ற நாகமுத்து பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி (U. K) காலஞ்சென்ற சபாரத்தினம் Dr P . தர்மராஜசிங்கம் (Mcleod Hospital, Inuvil) யோகரத்தினம் (Germany), திருமதி மனோரஞ்சிதம் குணரத்தினம் (Canada), இராசரத்தினம், துரையசிங்கம் (U, K), சிவராஜரத்தினம், திருமதி பராசக்தி மகேஸவரன் (Canada), திருமதி ஈஸ்வரி ரவீந்திரராஜா (Canada) ஆகியோரின் பாசமிகு தாயும், காலம்சென்ற இரத்தினசபாபதி, திருமதி பத்மாவதி [Germany] காலம் சென்ற நாகேஸ்வரி, திருமதி தவமணிதேவி. [Germany] திரு. குணரத்தினம் (Canada, திருமதி புஸ்பமலர், திருமதி சோமாவதி (U K) திருமதி பரமேஸ்வரி காலம் சென்ற மகேஸ்வரன் திரு. ப. ரவீந்திரராஜா (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (12 - 11 - 99) காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
Dr. P. தர்மராஜசிங்கம்,
திரு. P. இராசரத்தினம்,
திரு. P. சிவராசரத்தினம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

[70924]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

நடத்தும்

**கிராமியக் கலைப்**

**போட்டி விழா -- 1999**

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

**நிகழ்வு II**

பிரதம விருந்தினர்: திரு. கா. சந்திரராசா (பிரதேச செயலர், சங்கானை)

சிறப்பு விருந்தினர்: கலாநிதி என். சண்முகலிங்கன் (தலைவர், அரசறிவியல், சமூகவியல் துறை யாழ். பல்கலைக்கழகம்)

திரு. எஸ். இரத்தினம் (உதவி அரசாங்க அதிபர், வேலணை)

இடம்: நல்லூர் இளங்கலைஞர் மன்றம்

காலம்: 13 -- 11 -- 99 சனிக்கிழமை
முற்பகல் 9. 00 மணி தொடக்கம் 6. 00 வரை

**இடம் பெறும் நிகழ்வுகள்**

- கிராமிய நடனம்
- குதிரை யாட்டம்
- கோலாட்டம்
- கும்மி குடமூதல்
- வேலாட்டம்
- தாலாட்டு ஒப்பாரி
- ஒயிலாட்டம்
- நாட்டார் பாடல் (பொது)

குறிப்பு:- வீடியோ செய்து ஆவணப்படுத்த இருப்பதால் பங்கு கொள்வோர் அதற்கேற்ப ஒப்பனையுடன் பங்கேற்கவும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

(70865)


## செயற்பாட்டு மண்டபம் அமைப்பு

வடமராட்சிப் பகுதியில் சுமார் 24 லட்சம் ரூபா செலவில் இரண்டு பாடசாலைகளில் மாணவர் செயற்பாட்டு மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன

மாகாண அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் 12 லட்சம் ரூபா செலவிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் 12 லட்சம் ரூபா செலவிலும் இந்த மண்டபங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன (6-109

## யாழ். பல்கலைக்கழகத்தில் ஈழத்து தமிழ் நூல் கண்காட்சி

### ஜனவரி முதல் வாரம் நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 12

ஈழத்து தமிழ் நூல்களின் கண்காட்சி ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது

யாழ். பல்கலைக்கழக தமிழ் துறையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக்கண்காட்சியை மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாக தமிழ்த்துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராஜா தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்தக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் எழுத்தாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மண்டபத்தில் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் பி. ப. 2 மணிக்கு 'தமிழியல்கள்' என்னும் தலைப்பில் கருத்தரங்குகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

## வழக்குதொடரப்போவதாக சரத் அமுனுகம அறிவிப்பு

கொழும்பு, நவ. 12

கட்சியை விட்டு தம்மை வெளியேற்றியதை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 35 பேரை கட்சியை விட்டு வெளியேற்றியது சட்ட விரோதமானது.

ஐ. தே. கவின் சட்ட விதிகளின் படி இத்தகைய விவகாரங்கள் ஒழுக்காற்று குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு எதுவும் இடம் பெறாமலேயே எம்மை கட்சியை விட்டுவெளியேற்றி உள்ளனர். எமது விவகாரம் தொடர்பாக முதலில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6)

## நஞ்சூட்டி அழிப்பு

கைதடி, நவ. 12

கைதடி குமரநகர்ப் பகுதியில் கட்டாக்காலியாகத் திரிந்த நாய்கள் கடந்த செவ்வாய், புதன் இரு நாள்களும்நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. (6-74)


பொய்யாமொழி ஜோதிடம்

**அதிர்ஷ்டம் அழைக்கிறது**

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும்.

ஞாயிறு முழுநாளும்

V.S.S குருக்கள்

மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடம்.

(70897)


## பண்டிதர் பரீட்சை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். சைவ பரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர் மற்றும் பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் ஆகிய பட்டங்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைகள் யாவும் அடுத்த வருடம் மே மாதம் இறுதி வாரத்தில் நடத்தப்படும் எனவும் —

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் —

சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலர் சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். [6-7-111]

## மழையினால் நெற்பயிர் அழிவு

யாழ்ப்பாணம், நவ. 12

கடந்த மாதம் பெய்த மழையினால் பல பகுதிகளில் நெற்பயிர்கள் அழிந்துள்ளன பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அழிந்துள்ள நெற் பயிர்களின் விவரங்கள் வருமாறு:-

பருத்தித்துறை 5 ஹெக்டேயர், கரவெட்டி 20 ஹெக்டேயர், சாவகச்சேரி 320 ஹெக்டேயர், கோப்பாய் 20 ஹெக்டேயர், தெல்லிப்பழை 5 ஹெக்டேயர், சண்டிலிப்பாய் 15 ஹெக்டேயர், சங்கானை 92 ஹெக்டேயர், உடுவில் 15 ஹெக்டேயர்.

விவசாயத் திணைக்களத்தினால் மேற்படி விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (6-5)

## உழவு இயந்திரம் கொள்வனவு

அரியாலை, நவ. 12

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் உழவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய உள்ளது.

இப்பகுதி விவசாயிகளின் தேவைகருதி அவர்களுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் நோக்குடன் இது கொள்வனவு செய்யப்பட உள்ளதாக சங்க அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். (ஐ-8-17)


மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி இராசம்மா இராசு**

(ஆதியாமலை, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி)

மண்ணுலகில்: 20 - 07 - 1947

விண்ணுலகில் 14-11-1996

திதி 12 - 11 - 1999

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
உங்கள் நினைவு எம்மை விட்டுப் போகாதம்மா!

பிரிவால் துயருறும்

கணவன்: க. இராசு,
பிள்ளைகள் இராஜேஸ்வரி, தர்மகுலராஜா (சுவிஸ்), இராஜசுலோசனா, சுலக்சனா
மருமக்கள்: மு. சுப்பிரமணியம் (லண்டன்), ம. யோகராசா, க. சுபாசினி (சுவிஸ்),
தம்பி: சிறிமுருகன் (சுவிஸ்)
மற்றும் பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்.

ஆதியாமலை, உடுப்பிட்டி. (70879)



31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 - 04 1934



மறைவு 13 - 10 - 1999

திருமதி

**மனோன்மணி முருகேசு**

( திக்கம், அல்வாய் மேற்கு, பிரவளவு )

எமது பாசமிகு தாயாரின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் கடிதம், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோர் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12-11-99, வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

" ஆண்டா வளவு "
கொற்றாவத்தை. (70878)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 2000

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள், உட்பட்டதுமான சந்தைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை 01 - 01 - 2000 முதல் 31 - 12 - 2000 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளராகிய என்னால் 02 – 12 – 1999 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணைப் பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 250ம் செலுத்துவதன் பேரில் 01-12-1999 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி வரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்த கேள்விப் படிவங்களை யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 02-12-1999 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12 30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "..........." கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது ஏற்படும் தாமதங்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பேற்க மாட்டாது.

கேள்விகள் 02-12-1999 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும்.

அட்டவணை

| சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வி |
|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 5,000/- | 3,09,400/- |
| 2. குருநகர் சந்தை | 5,000/- | 4,75,100/- |
| 3 செங்குந்தா சந்தை | 5,000/- | 2,69,800/- |
| 4. கொட்டடி மீன் சந்தை | 5,000/- | 6,18,000/- |
| 5. பாசையூர் சந்தை | 2,500/- | 26,000/- |
| 6. நாவாந்துறைச் சந்தை | 2,500/- | 12,000/- |
| 7. அரியாலைச் சந்தை | 2,500/- | 70,000/- |
| 8. கொழும்புத்துறைச் சந்தை | 500/- | 2,200/- |

| துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|
| 1. யாழ். வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள து. ச. வ. பாதுகாப்பு நிலையம். | 2,500/- | 1,32,000/- |
| 2. கஸ்தூரியார் வீதி, து. ச. வ. பாதுகாப்பு நிலையம். | 2,500/- | 15,000/- |

| இறைச்சிக் கடைகள் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வி | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1 கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2.500/- | 23,100/- | 123. 75 |
| 2. " " | 02 | 2,500/- | 18,500/- | 112 50 |
| 3. " " | 03 | 2,500/- | 21,100/- | 112. 50 |
| 4. " " | 04 | 2,500/- | 21,000/- | 112. 50 |
| 5. " " | 05 | 2,500/- | 18,200/- | 112. 50 |
| 6. " " | 06 | 2,500/- | 17,400/- | 112. 50 |
| 7. " " | 07 | 2,500/- | 17,100/- | 112. 50 |
| 8. " " | 08 | 2,500/- | 17,000/- | 112. 50 |
| 9. செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 65,100/- | 112. 50 |
| 10. " " | 02 | 2,500/- | 25,100/- | 112. 50 |
| 11. அரியாலை மாட்டிறைச்சிக் கடை | 01 | 2.500/- | 36,300/- | 135. 00 |
| 12. அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | | 2,500/- | 15,750/- | 135. 00 |
| 13. குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 76,300/- | 195. 00 |
| 14. " " | 02 | 2,500/- | 69,300/- | 195. 00 |
| 15. " " | 03 | 2,500/- | 66,100/- | 195. 00 |
| 16. " " | 04 | 2,500/- | 40,900/- | 195. 00 |
| 17. " " | 05 | 2,500/- | 45,600/- | 195. 00 |
| 18. " " | 06 | 2,500/- | 44,200/- | 195. 00 |
| 19. " ஆட்டிறைச்சிக் கடை | 07 | 2,500/- | 8,100/- | 195. 00 |
| 20. பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 48,500/- | 135. 00 |
| 21. " " | 02 | 2,500/- | 35,500/- | 135. 00 |
| 22. நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 53,900/- | 135. 00 |
| 23. நாவாந்துறை " | 01 | 2,500/- | 11,000/- | 200. 00 |
| 24. " " | 02 | 2,500/- | 9,000/- | 200. 00 |
| 25. " " | 03 | 2,500/- | 13,500/- | 200. 00 |
| 26. " " | 04 | 2,500/- | 5,200/- | 200. 00 |
| 27. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 05 | 2,500/- | 7,250/- | 200 00 |
| 28. " " | 06 | 2,500/- | 5,250/- | 200. 00 |
| 29. " " | 07 | 2,500/- | 9,750/- | 200. 00 |
| 30. " ஆட்டிறைச்சிக் கடை | 08 | 2,500/- | 3,750/- | 200. 00 |

முக்கிய குறிப்பு:

தற்போது குத்தகை / வாடகை நிலுவைப்பணம் செலுத்தவேண்டியவர்களும் ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப்படிவம் பெற அருகதையற்றவர்களாவர்.

சி. மா. பொன்னம்பலம்
பதில் ஆணையாளர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1999—11—10

[சி/9790]


## கோயிலுக்கு தேவையா?

பஞ்சலோக விக்கிரகங்கள் செம்பினாலான கொடிமரம்
இந்திய சிற்பிகளின் கைவண்ணத்தில் உருவாக்கியது
பெற்றுத்தரப்படும்.

ஞாயிறு முழு நாளும் சந்திக்கலாம்.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடம்.

சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்.

[70897]

## மானி. இந்துவின் சாதனை வாழ்க

1921 ஆம் ஆண்டும் 1925 -- 1930 வரையும்
முன்னர் ஒரு பிரிவு சாம்பியன் ஆனது.
1999 இல் 69 ஆண்டுகளின் பின்பு மீண்டும்
மானிப்பாய் இந்து மூன்று பிரிவுகளும்
(18, 16, 14 வயதுகளில்) பெற்ற சாம்பியன் விருதுகளை
வாழ்த்துகின்றோம்.

மானிநகர் இந்துக் கல்லூரித் தாயின்
மகத்தான சாதனைகள் சொல்லப்போமோ?
ஞானி விபுலானந்தர் காலந் தொட்டு
ஞானம் புகழ் சண்முகநாதன் வரை
தேனினும் இனிய உதை பந்தாட்டப்போட்டி
தீரமுடன் விளையாடி வென்ற அந்தக்
கானமுடன் சாதனைகள் பாடிடுவோம்
கல்லூரித் தாயவளும் நீடு வாழ்க!

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ
ந. வீரமணி ஐயர் எம். ஏ.,
இ. குமாரகுலசிங்கம் (சுதுமலை),
ந. விவேகானந்தராஜா (மானிப்பாய்),
பழைய மாணவர்கள்.
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

[சி/9791]

## வெளியீட்டு விழா

கென்றீசியனின்

## பனிப் பூக்கள்

அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
அவர்களின் குருத்துவ வெள்ளிவிழா நினைவாக
A.R. விஜயகுமாரின் ஆக்கத்தில் 'ஆனந்' இசைக்குழுவின்
உதவியுடன் கென்றீசியன் பெருமையுடன் வெளியிடும்
கிறிஸ்தவ பாடல்கள் ஒலிப்பதிவு நாடா

இடம்: புனித என்றிஅரசர் கல்லூரி
இளவாலை

காலம்: 13 – 11 – 99 (நாளை மாலை) 3-30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## அழகுநிலா தொலைத் தொடர்பகம்

070 – 212532 / I D. D. 0094-70-212532
உள்ளூர், சர்வதேச அழைப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.
கல்லூரி வீதி, இளவாலை.
(70873)

நெல்லியடி

## தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய
## கந்தசஷ்டி விழா

6 ஆம் நாள் 99 – 11 – 13 சனிக்கிழமை
காலை 108 சங்காபிஷேகமும் விசேட பூசையும்
பி. ப. 1-00 மணி — 3-00 மணி வரை

### கந்த நாதஸ்வர கானமழை

வழங்குவோர்:

சங்கீத நாத சாகரம் R. கேதீஸ்வரன்
லய ஞான திலகம் N. ஜெயராம்
நாதஸ்வர வித்துவான் R. ஞானசம்பந்தன்
தவில் வித்துவான் K. சிவமூர்த்தி

பி. ப. 3-30 மணிக்கு:
வசந்தமண்டபப் பூசையும் சுவாமி வீதியுலாவும்

7 ஆம் நாள் 99-11-14 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 3-30 மணியளவில்
R. கேதீஸ்வரன் குழுவினரது நாதஸ்வர இசையுடன்

### சூரசம்ஹாரம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

(சி/9783)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டரங்கு

# 14ஓட்டங்களால் இந்தியா வெற்றி!

குவாலியர், நவ. 12

இந்திய — நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று குவாலியரில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டம் மிகவும் மோசமானதாக அமைந்தது. அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் 23 பந்துகளை எதிர்கொண்டு ஒரு ஓட்டத்தைமட்டுமே பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தது அணியை ஆட்டம்காணச்செய்தது குறைந்த ஓட்டங்களுக்கு அணியின் 5 விக்கெட்டுக்கள் வீழ்ந்த போதிலும் ஆரம்ப துடுப்பாட்டக்காரர் சௌரவ் கங்குலியும் பின் நிலைத் துடுப்பாட்டக்காரர் றொபின்சிங்கும் இணைந்து அணியைப் பலமான நிலைக்கு இட்டுச் சென்றனர்.

இவர்களது இணை இறுதி 10 ஓவர்களில் மட்டும் 114 ஓட்டங்களைப் பெற்றது

இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சௌரவ் கங்குலி 150 பந்துகளில் 3 சிக்ஸர்களும் 18 பவுண்டறிகளும் அடங்கிய 153 ஓட்டங்களையும் றொபின்சிங் 34 பந்துகளில் 3 சிக்ஸர்களுடனாக 45 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

50 ஓவர்களில் 262 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய நியூஸிலாந்து அணியின் ஆரம்பம் வெகு ஸ்திரமானதாக அமைந்தது. தனது முதலாவது விக்கெட்டை மொத்த ஓட்டங்கள் 99 ஆக உள்ளபோது இழந்த நியூஸிலாந்து அணி பின்னர் ஆட்டங்காணத் தொடங்கியது

நதான் அஸ்டில் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூஸிலாந்து அணியின் வேகம் குறைந்தது

நியூஸிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சில் நிக்கல் சோப்ரா 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அணில் கும்ப்ளே 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் அஜித் ஆகார்கர், சௌரவ் கங்குலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக அதிக ஓட்டங்களை எடுத்து இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்த சௌரவ் கங்குலி அறிவிக்கப்பட்டார்

தற்போதுள்ள நிலைமைகளின்படி நடைபெற்றுவரும் இத்தத் தொடரில் 2—1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னணியில் உள்ளது.

இந்தத் தொடரின் அடுத்த ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறும் (இ-4)

## விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், நவ 12

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 6 பாடசாலைகளுக்கு பட்டினிக்கெதிரான திருவனத்தால் விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

பண்டத்தரிப்பு ஜசிந்தா யோமன் சத்தோலிக்க வித்தியாலயம், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், உடுவில் பான்ஸ் மகாவித்தியாலயம், சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம், தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கே உபகரணங்கள் வழங்கப்பட்டன.

[ஐ-10]

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 12

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டை முன்னிட்டு நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை சிற்றம்பலம் ஆடுகளத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் உடற்கல்வி வி. க அணியும் பல்கலைக்கழக அணியும் மோதுகின்றன. (இ-4)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 12

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கனகரத்தினம் ம. ம. வி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 3 மணிக்கு — போர்த் ஸ்ரார் வி. க. 'பி' அணி எதிர் விநாயகர் வி. க 'ஏ' அணி.

★ மாலை 4.30 மணிக்கு — கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. எதிர் நொதேர்ண் வி. க.

(இ-4)

## மெய்வன்மை பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 12

மெய்வன்மை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதிநாள் இன்றாகும்.

(இ-3)

## கூடைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ 12

யாழ் ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலைகள், கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி ஆடுகளத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி 'ஏ' அணியும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (இ-4)

## இலங்கை பிரதிநிதியாக துணைவேந்தர்

யாழ்ப்பாணம், நவ. 12

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் சங்க செயற்குழுவில் இலங்கைப் பிரதிநிதியாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்த அமைப்புக்கு இவர் மட்டுமே தெரிவாகியுள்ளார் (இ-3)

## மதகுருமாரின் பெயர் விவரங்கள் திரட்டு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்டத்திலுள்ள மத குருமார்களினது பெயர் விவரங்கள் ஜனாதிபதி செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

எனவே இங்குள்ள சகல மதகுருமாரும் தங்கள் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு பெயர் விவரங்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு யாழ் மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார்.

(இ-9)

## கௌரவிப்பு விழா

வடமராட்சி, நவ. 12

சமயச் சொற்பொழிவாளர் ஆறுதிருமுருகனுக்கான கௌரவிப்புவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9—30 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

விழாமுடிவில் ஆறுதிருமுருகனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும் [ஐ-173]

### தென்மராட்சிப் பகுதியில்

# 2 ஆயிரத்து 604 பேருக்கு மீளக்குடியமர்வு நிவாரணம்

தென்மராட்சி, நவ. 12

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் இதுவரை 2 ஆயிரத்து 604 பேருக்கு மீளக்குடியமர்வு நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்திலிருந்து சொந்த இடங்களுக்குத் திரும்பிய 2 ஆயிரதது 168 குடும்பங்களுக்கும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளான வலிகாமம் பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலையில் பிரதேசத்தில் தங்கியுள்ள 436 குடும்பங்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுக்காக வன்னியிலிருந்து வந்த 117 குடும்பங்களும், உயர் பாதுகாப்பு வலயப் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களும் விண்ணப்பித்துள்ளனர்

(இ-117)

### ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஐ. தே. க. வின் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தும்படியும்—

அதன் பின்னர் பகிரங்க விவாதம் குறித்து முடிவுசெய்யலாம் என்றும்— ஜனாதிபதி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-3)

# மழையால் பயிர் அழிவு

மானிப்பாய், நவ. 12

மானிப்பாய் கிராய்க் குளம் பகுதியிலும், சேலன்காமம் குளப் பகுதியிலும் உள்ள வயல்நிலங்களில நடப்பட்ட நெல் நாற்றுகள் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக முற்றாக அழிந்துவிட்டன.

நாற்றுமேடைகளை அமைத்து அவற்றில் உண்டாக்கிய நடுகைப் பயிர்களே அழிந்துவிளன.

(இ90)

# வீடியோ நாடாக்கள் தபாலகத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், நவ 12

குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பவென பொதுமக்களால் யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப் பட்ட வீடியோ நாடாக்கள் அங்கு பெருமளவில் தேங்கிக் கிடக்கின்றன என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன

பாதுகாப்பு பிரிவினரால் ஒவ்வொரு வாரமும் 25 வீடியோ நாடாக்களே சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும்—

இதனாலேயே தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் சுமார் 350 வரையான வீடியோ நாடாக்கள் தேங்கிக் கிடப்பதால் பொது மக்களிடம் இருந்து வீடியோ நாடாக்கள் ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

(இ-9)

### இரு யுவதிகளை

# பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றச்சாட்டு

ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்த யுவதிகள் இருவர் நான்கு இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் தீபாவளி தினத்தன்று பருத்தித்துறையில் ஆத்தியடி என்ற இடத்தில் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 14 வயது, 15 வயது நிரம்பிய இந்த இரு யுவதிகளும் வல்லிபுரம் கோயிலுக்குச் செல்வதற்காக சம்பவ தினம் பஸ்ஸில் வந்து பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இறங்கிய சமயம் இந்தஇளைஞர்களினால் பலவந்தமாகச் சைக்கிளில் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது

அன்று இரவு ஆத்தியடி பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் வைத்து இந்த இரு யுவதிகளையும் இந்த நால்வரும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் டெக்கில் ஆபாசப்படம் ஒன்றும் அங்கு போட்டுக் காண்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்த இரு யுவதிகளும் அடுத்தநாள் காலை பருத்தித்துறை சிவன்கோயிலடிப் பகுதியில் காணப்பட்டபோது அங்கு சென்ற பருத்தித்துறை ஈ. பி. டி. பி பொறுப்பாளர் ஐ சிறீரங்கேஸ்வரனினால் மீட்கப்பட்டுப் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காவலாளி ஒருவர் கைதாகி விசாரணை செய்யப்பட்டுவருகிறார் பிரஸ்தாப யுவதிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் இளைஞர்களைப் பொலீஸார் தேடிவருகின்றனர்.

இந்த யுவதிகளில் ஒருவர் மாணவி என்று தெரிவிக்கப்படுகிறது (இ-15-173-104)

# அறநெறிப் பாடசாலை

காரைநகர். நவ 12

தம்பாட்டி நுணியம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்று கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வு மேற்படி ஆலய பரிபாலனசபைத் தலைவர் மு சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ் செல்வநாயகமும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர் ந மதனராசாவும் கலந்து கொண்டனர். (இ-73)

### வெறிச்சோடிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

கியது.

நகரில் பொதுமக்கள் எவரும் மாலையில் காணப்படவில்லை என்றும் —

நகரம் முற்றாக வெறிச்சோடிக் காணப்பட்டது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து வாகனங்களில் கொழும்பு செல்பவர்கள் ஈரப்பெரியகுளம் சோதனை முகாமில் மணிக்கணக்கில் காத்துக் கிடப்பதாகக் கூறப்பட்டது.

வவுனியாவில் இருந்து சுமார் 5 ஆயிரம் பேர் ரயில் மூலம் நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்ததாகக் கூறப்பட்டது

அதே சமயம் பொதுமக்களை இடம்பெயர வேண்டாம் என்றும்— பாதுகாப்புத் தரப்படும் என்றும் ஒலிபெருக்கி மூலம் பொலீஸார் அறிவித்த வண்ணம் இருந்தனர். [இ-3-4-11-21-164]

### அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேவேளை— ''சஜிந்த'' கப்பல் நேற்று காங்கேசன் துறை வந்துசேர்ந்தது.

அந்தக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி இன்று ஆரம்பமாகவிருக்கின்றது. (உ-3)

### முன்னரங்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

களை முறியடித்தனர்.

இதனிடையில் புளியங்குளத்துக்கு மேற்கே விடுதலைப்புலிகளின் வாகனம் நடமாடுவதை படையினர் அவதானித்துள்ளனர்.

அந்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியதில் இரு புலிகள் உயிரிழந்தனர்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-4)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

நகரில் உள்ள மக்களே இடம் பெயர்ந்தனர் என்றும்—

பெரும்பான்மையான கிராம மக்கள் தமது இருப்பிடங்களில் தொடர்ந்து வாழ்வதாகவும் அது மேலும் தெரிவித்தது

பாதுகாப்புப் படையினர் பொதுமக்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ரீ. வி. ...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்கள் மறுப்புத் தெரிவிக்கவே அவர்களது வீடியோ கஸட்டைப் பறித்து அவர்களை சுமார் 40 நிமிட நேரம் தடுத்து வைத்துப் பின்னர் விடுவித்தனர் என்றும்— கூறப்பட்டது. (இ-3)


## படிவம்

ஆசிரிய பதவிக்கான
விண்ணப்பப் படிவம்
13-11-99 முதல்
விற்பனைக்கு வருகின்றது.
விண்ணப்ப முடிவு திகதி
23 . 11 . 1999
படிவங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பாரதி பதிப்பகம்
430,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்:
021 - 3081
[சி/9800]


# வடக்கு - கிழக்குக்கு ஆசிரியரை நியமிக்க உலக வங்கி அங்கீகாரம்

கொழும்பு, நவ. 12

வடக்கு - கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக புதிய ஆசிரியர்களை நியமிக்க உலக வங்கி இலங்கை அரசுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், உலக வங்கி தெற்காசிய விவகாரத்துக்கான பணிப்பாளர் வின்சன் கிறீனுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம், சிரேஷ்ட செயலாளர் கி. சரவணபவானந்தன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

உலகவங்கி விதித்துள்ள தடையால் வடக்கு — கிழக்கில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க முடியாதுள்ளது என்றும்—

இந்தத் தடையை உடன் நீக்கவேண்டும் என்றும் — அவர்கள் கோரினர்.

உலகவங்கி இத் தடையை நீக்கியுள்ளது என்றும்—

விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்றும் — அவர் உறுதியளித்தார்.

அவர் உறுதியளித்த ஏனைய விடயம் வருமாறு:

★ கல்வி வெளியீடுகளை அச்சிடும்போது ஆசிரியசங்கப் பிரதிநிதிகள் அதில் அங்கம் வகிக்க வசதி செய்தல்.

★ பாடவிதான அபிவிருத்தியில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளின் பங்களிப்பைப் பெறுதல்.

★ கோப்பாயில் இயங்கவுள்ள கல்விக் கல்லூரியில் புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்தல். (இ-3)

வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

வங்கிப் பணிகளுக்காக நேற்று வங்கிகளுக்குச் சென்ற பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (இ-3-21)

## விசேட பிரிவு அமைப்பு

ஊவா மாகாணத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களை முறியடிக்கவென 'பொலீஸ் மோட்டார் வாகனப் படைப்பிரிவு' ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படைப்பிரிவினர் அவசர நிலைமைகள் ஏற்படும் போது வீதித்தடைகளை ஏற்படுத்தி தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என ஊவா மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் தயா ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். (இ-7)

மோட்டிப்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

குழு கோரியுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள வெற்றிடங்கள் கூடுதல் புள்ளி பெற்றவர்களில் இருந்து நிரப்பப்படும் என்றும் —

நியமனம் பெறுபவர்கள் தொடர்ந்து10வருடங்க அந்தப் பாடசாலையில்கல்விபோதிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

## மன்னாரில் பரீட்சை ஏற்பாடு

மன்னார், நவ. 12

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதரப் சாதாரண தரப் பரீட்சைக்கு மன்னார் மாவட்டத்திலிருந்து மூவாயிரத்து 129 பரீட்சார்த்திகள் தோற்றவிருப்பதாக மன்னார் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 25 நிலையங்களும், 10 இணைப்பு நிலையங்களும் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில் ஒரு பரீட்சை நிலையம் அமையும் என்றும் —

இடம்பெயர்ந்த மாணவர்களின் நன்மை கருதி பேசாலை பத்திமா மகா வித்தியாலயத்தில் ஒரு பரீட்சை நிலையம் ஏற்படுத்தப்படும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதி மேயர்..

[முதலாம் பக்கத் தொடர்]

இன்று சந்தித்துப்பேச இணக்கம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சரை இன்று சந்தித்துப்பேச உறுப்பினர்களில் ஒருவரான முகுந்தன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தான் சமுகமளிக்கமுடியாத காரணத்தை விளக்கி பிரதி மேயருக்கு நேற்றிரவு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (இ-3)


## A/L ENGLISH - 2001

Commences on
Friday 19th inst 3 30 p.m
at
The Excellent Institute
Meesalai.
(70902)

## பொருளியல்

S. வரதராஜன் B A (Hons)
1st in Com.
G.A.Q, B.A part - 1, B.A Final
(யாழ்., பேராதனை)
விரிவுரைகளும் இவ் ஆசிரியரது
பிரத்தியேக வகுப்புகள் அனைத்தும்
13-11-1999 சனிக்கிழமை முதல்
நடைபெறும்.
★ நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்.
(70846)

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
இஷாக், ஹூசைன்,
சுவலட்சுமி
கண்மணி உனக்காக
விக்னேஸ், மந்தார
புதுகுடித்தனம்
சாந்தன் வீடியோ
றெக்கோடிங்
சென்ரர்
788B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(70935)

இன்றைய வீடியோ
CD வெளியீடு
பிரசாந்த்
நடித்த
ஹலோ
பிரதிகள் 4.00 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.
திரையரங்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
அடுத்த வெளியீடு
முதல்வன்
விஷ்ணு வீடியோ
கே. கே. எஸ். றோட்,
கோண்டாவில்.
(சி/9801)

## கணிப்பீடும் பரிசளிப்பும்!

மாதாந்தப் பரீட்சைக்கான
கணிப்பீட்டு அறிக்கையும்
பரிசளிப்பு விழாவும்!
சயன்ஸ் அக்கடமி
14.11.99 5.00 p.m.
றூபா அக்கடமி
15.11.99 5.00 p.m.
பெற்றோர் தவறாது
சமுகம் தரவும்.
ஆண்டு இறுதி பரீட்சை
நாளை ஆரம்பம்
[70914]

## உங்கள் கவனத்துக்கு

நமது நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 1990 ஆம் ஆண்டில் இருந்து மூடப்பட்டிருந்த
இளவாலைத்
திருக்குடும்ப கன்னியர் மட
சிறுவர் இல்லம்
(அநாதை இல்லம்)
மீண்டும் 1998 இல் ஆரம்பிக்கப்பட்டது. மேல் மாடிக் கட்டடம் முடிவுறாத நிலையில் போதிய மாணவர்களை அனுமதிக்கவில்லை. தற்போது அனுமதிக்கமுன்வந்துள்ளோம். எனவே விண்ணப்பிக்க விரும்புவோர் விடுதிச்சாலை முகாமையாளருடன் நேரடியாகத் தொர்டர்பு கொள்ளவும்.
அத்துடன் இதே இல்லத்தில் இயங்கிவந்த
திருக்குடும்பக்கன்னியர்மட விடுதிச்சாலை
2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட இருக்கிறது. அனுமதி பெற விரும்புவோர் சனி, ஞாயிறு தினங்களில் விடுதிச்சாலை முகாமையாளருடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
சிறுவர் இல்ல முகாமையாளர்,
இளவாலை.
(70880)

## COMPUTER CLASSES

DIPLOMA IN MS OFFICE
- Introduction to computer
- Windows 95 / 98 / NT
- MS Power Point 97/2000
- MS Outlook 97/2000
- MS Word 97 / 2000
- MS Excel 97 / 2000
- MS Access 97 / 2000

VISUAL BASIC 6
VISUAL C ++
ADOBE PAGE MAKER 6.5
TURBO C++

- The First time in Jaffna, Visualized Method of Teaching.
- Unlimited Practical Hours.
- Per Computer Per Student.
- Free Course Materials for Each Modules.
- Library Facilities.

Above Classes Commence on
13 - 11 - 1999 at 10.00 a. m. and 4.00 p. m.
Contact:
IBMS COMPUTER TRAINING CENTER
No. 701, K. K. S. Road, JAFFNA.
(Near Jaffna Hindu College)
(70913)


இப் பத்திரிகை [illegible] 12-11-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org